# பாதுகாவலன்

PATHUKAVALAN

**சிறுகதை**

பத்திரிகைக்கு சிறுகதைகளை எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். படிப்பினை ஊட்டுபவையாக, சிந்தனையைத் தூண்டுபவையாக, சமூக சீர்கேடுகளைப் படம்பிடித்துக்காட்டுபவையாக, அல்லது, புரட்சிக் கருத்துக்களைக் கொண்டவையாக அமையலாம். பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப்பட மாட்டா. பிரசுரிக்கப்படும் கதைகளுக்கு நன்கொடையாக ரூபா 25/= வழங்கப்படும்.

மலர் 114 இதழ் 13 10-6-1988 (யூன்10-யூன்17) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

30 JUN 1988

# மட்டுநகர் இணைப்பேராலயப் பங்குத்தந்தை-பிரஜைகள் குழுவின் தலைவர் சுட்டுக்கொலை.

மட்டுநகர் பிரஜைகள் குழுத் தலைவரும் புனித மரியாள் இணைப்பேராலயப் பங்குத்தந்தையுமான அருள்திரு. சந்திரா பெர்னாண்டோ அடிகள் இனந்தெரியாத மூன்று துப்பாக்கி நபர்களால் இம்மாதம் 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு அவரது அறையில் வைத்துச் சுடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவரது அடக்கச்சடங்கு மரியாள் பேராலயத்தில் 8ஆம்திகதி புதன்கிழமை மாலை நடைபெற்றது. திரளான மக்கள் அஞ்சலி செலுத்தினர். யாழ் மறைவட்ட குருமுதல்வர் அருள்திரு. எஸ். ஏ. மைக்கல்சாமியும் இதில் பங்குபற்றினர். ஆயுதம் தாங்கிய 3 விடுதலைப்புலிகள் இக்கொலையைச் செய்ததாக அரசசெய்திகள் அறிவித்தன. பின்பு செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒரு போராளிக் குழுவினரே இக்கொலையைச் செய்தனர் என பொலிசார் சந்தேகிப்பதாக ஐலண்ட் பத்திரிகை (8-6-88) நிருபர் திரு. ஜெகான் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பகுதியெங்கும் பரவலாக வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. புனிதமரியாள் இணைப்பேராலயத்தில் வைக்கப்பட்டிருந்த பிதாவின் பூதவுடலுக்கு மக்கள், பாடசாலை மாணவர்கள் சாரிசாரியாக வந்து அஞ்சலி செலுத்தினர். தேவாலயத்திலிருந்து சோககீதங்கள் இசைக்கப்பட்டவண்ணமிருந்தன. அஞ்சலிக் கூட்டத்தில் சர்வமதத் தலைவர்கள் அஞ்சலியுரையாற்றினர். பிதாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும்வகையில் மக்கள் அஞ்சலித் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்டனர்.

[illegible]ச[illegible]த். அமெரிக்க, கம்யூனிச நாடுகளிலிருந்தும் புதிய கருதினால்மார் தெரிவு

# [illegible] 25 புதிய கருதினால்கள் நியமனம்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் புதிதாக 25கருதினால்களை யூன் 28ஆம் நாள் நியமிக்கவிருக்கிறார். புதிய கருதினால்கள் 25 பேருடன் கருதினால்களின் எண்ணிக்கை 161 ஆக உயரவிருக்கிறது பல்வேறு நாடுகள், குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள் இவற்றிலிருந்து புதிய கருதினால்கள் அறிவிக்கப்படவிருக்கிறார்கள். கருதினால்மார், திருத்தந்தை அவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, அதற்கான வாக்களிக்கும் உரிமை பெற்றவர்கள். இவர்களில் ஒருவரே திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை பெற்றவர். இத்தனை சிறப்புக்குரிய கத்தோலிக்க திருச்சபையின் இளவரசர்கள் இப்பொழுது பரவலாக்கப்பட்டிருக்கிறார்கள் பின்தங்கிய நாடுகளில் இருப்பவர்களுக்கும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் போன்ற ஏழை நாடுகளில் இருப்பவர்களுக்கும், ஆபிரிக்க நாடுகள் போன்ற ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்த இருக்கக்கூடிய நாடுகளில் இருப்போருக்கும் இந்த உரிமை இப்பொழுது பரவலாக்கப்பட்டிருக்கிறது. இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால், ரஷ்யாவைச் சார்ந்த யுக்கிரேனிய நாட்டிற்கு ஒரு கருதினால் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஹொங்கொங் நாட்டிற்கு ஒரு கருதினால் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது அது விரைவில் சீனாவுடன் சேரவிருக்கிறது. இப்படிக் கம்யூனிஸ்ட் நாடுகள் எனப்படும் பொதுவுடமை நாடுகளைச் சார்ந்தவர்களுக்கும் கருதினால் உரிமை வழங்கவிருக்கிறார் திருத்தந்தை.

## மரண விசாரணையில் தகவல்

வீரகேசரி. ஜுன். 8.

எனது தமையனார் சுடப்பட்டதாக அறிந்து நான் தேவாலய வாசஸ்தலத்திற்குச் சென்றபோது அவர் கதிரைக்கு அடியில் இரத்த வெள்ளத்தின் மத்தியில் கிடந்தார்.

இவ்வாறு மட்டக்களப்பு பிரஜைகள் குழுத்தலைவரும் புனித மரியாள் மேற்றிராசன தேவாலய பங்குக்குருவுமான வண. பிதா சந்திரா பெர்னாண்டோவின் மரணம் தொடர்பான மரண விசாரணையில் சாட்சியமளித்த வண. பிதாவின் இளைய சகோதரரான ஜே. சி. பெர்னாண்டோ தெரிவித்தார்.

மட்டக்களப்பு பதில் நீதிவான் கே. வேலுப்பிள்ளை முன்னிலையில் தேவாலயத்தில் வைத்து மரணவிசாரணை இடம்பெற்றது.

சாட்சி மேலும் கூறியதாவது:- சம்பவதினம் மாலை 5.05 மணியளவில் நான் வீட்டிலிருக்கையில் எனது தமையனாரான பிதா சுடப்பட்டதாக எனது மைத்துனர் வந்து தெரிவித்தார். நான் தேவாலயத்தில் உள்ள அவரது வாசஸ்தலத்திற்குச் சென்றபோது அவர் கதிரையின் அடியில் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தார். தலையில் சூட்டுக்காயம் காணப்பட்டது இடது, வலது கன்னங்கள் சிதைந்து காணப்பட்டன. அருகில் வெற்றுத் தோட்டாக்களும் காணப்பட்டன.

பிரேத பரிசோதனையில் மூளை சிதறியதால் ஏற்பட்ட மரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை முடிவில் கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## நீதிக்கான தாகத்தை அடக்க முடியாது

"மட்டுநகர்பிரஜைகள்குழுத் தலைவர் அருள்திரு சந்திரா பெர்னாண்டோ அடிகளின் படுகொலை பற்றிய செய்தியைக் கேட்டுக் கவலையும், அதிர்ச்சியும் ஆத்திரமும்அடைந்தோம்.

இக்கொலையை யார் செய்திருந்தாலும் இக்கொலைக்குப் பொறுப்பானவர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது ஒரு கொடூரமானகுற்றம், ஒரு தனி மனிதனுக்கு எதிரானதோ ஒரு சபையினருக்கு எதிரானதோ அல்ல, மாறாக சமூகத்துக்கும் மனித சமுதாயத்துக்கும் எதிரானது ஏனெனில் அவர் அதன் நலனுக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

அண்மைக் காலத்தில், கபடமான சந்தர்ப்பங்களை அவர் எதிர்கொண்ட வேளைகளில் அவருடைய செயல்களையிட்டு நாம் பெருமிதம் கொண்டோம். சரியான மதிப்பீடுகளுக்கும், சமூக நீதிக்கும், மனித உரிமைகளுக்கும் அவர் வீரத்துடன் நின்றது எமக்குப் புத்துணர்ச்சியூட்டுவதாக இருந்தது. அவரில் ஒரு தலைவரையும் ஒரு மாதிரிகையையும் இழந்துவிட்டோம் என நாம் வருந்துகிறோம்.

இறையரசு நிறைவேறுவதில் அயராது பணிபுரிந்த இன்னுமொரு சமயத்தலைவரை திருச்சபையும் மக்களும் இழந்துவிட்டனர். எமது தலைமைக் குருவோடு மக்களுக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்த இன்னுமொரு குருவும் பலிப்பொருளுமாக அவர் ஆகிவிட்டார். இன்னுமொருவரது தியாக மரணத்தால்திருச்சபைவளமைஅடைந்துள்ளதை எண்ணி ஆறுதல் அடைவோம்.

அவரது மரணம் நீதிக்கான தாகம், மக்களுக்குச் சேவை என்பவற்றை அடக்குவதற்குப் பதிலாக ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் பல தலைவர்கள் முன்வரத் தூண்டுவதோடு உற்சாகமளிக்குமெனத் திண்ணமாக நம்புகிறோம். தீயசக்திகளின் செயல்களையிட்டு நாம் தேவையற்ற முறையில் குழப்பமடையாதிருப்போம். மாறாக, "நல்லவர்கள்' "பாதிக்காதவர்கள்" என்போரின் ஆபத்தான செயலற்ற நிலையையிட்டு விழிப்பாக இருப்போம் (Let us not be disturbed by the activities of the evil forces. Rather, let us be alert about the more dangerous passivity of the "good" and the "harmless")

இச்சம்பவமானது நம் எல்லோரையும் தீமைக்கு எதிராகப் போராடத் துணிவுடன் முன் வரவும், நன்மைக்காக ஒன்றுபடவும் இயக்கும் பணிப்புரையாக அமையட்டும்.

மட்டக்களப்பு மக்களுக்கும் திருச்சபைக்கும், அவரதுநெருங்கிய உறவினர், நண்பர்கள், சகவாளிகளுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

மேற்படி செய்தியை யாழ் நகரிலுள்ள நற்சமூகநடுநிலையம் மட்டுநகர் ஆயருக்கு அனுப்பியுள்ளது. இயக்குனரும், செயலர் திரு. சந்தியாப்பிள்ளையும் கையொப்பமிட்டு இச்செய்தியை அனுப்பியுள்ளனர்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# மூன்றுவது பலி

இலங்கை இனப்பிரச்சினை உருவாக்கிய பயங்கர வாதத்தின் விளைவாக வங்காலையில் அருள்திரு மேரி பஸ்ரியன் அடிகளும், பதுளையில் அருள்திரு மைக்கல் றெட்றிக்கோ அ. ம. தி. அடிகளும் மட்டுநகரில் அருள் திரு சந்திரா பெர்ணண்டோ அடிகளும் பலியாக்கப் பட்டுள்ளனர்.

மட்டுநகர் பிரஜைகள் குழுத்தலைவராக இருந்து அல்லற்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்து, மக்களின் துயர்துடைப்புப் பணியிலே அயராதுழைத்த அருள்திரு. சந்திர பெர்ணண்டோ அடிகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, அகால மரணமடைந்துள்ள செய்தி கேட்டு மக்கள் எல்லோரும் பேரதிர்ச்சிக்கு உள்ளாகினுர்கள்.

அருள்தந்தை அவர்கள் தம் உயிரைத் துச்சமென மதித்து, மக்கள்துயர் துடைக்க அண்மைக்காலங்களில் அரும்பாடுபட்டு உழைத்தவர். பயங்கரமான சூழ்நிலைகளிலும் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களது குறைகளைச் சுட்டிக்காட்டி, நிவாரணம் தேடுவதற்குத் தன்னுலான வழிகளை எல்லாம் கையாண்டு வந்தவர்.

அவரது பிரசன்னம் தமக்குத் தடையாயிருக்கிறது என்று எண்ணியவர்கள் அவரது உயிரைப் பறிக்கத் துணிந்தார்கள். இது ஒரு திட்டமிட்ட செயல்.

இன்றைய சூழநிலையில், இத்தகைய கொடூர செயல்கள் மத்தியில், கைகட்டி, வாய்பொத்தி நிற்பதைத்தவிர வேறு வழியறியாதவர்களாகவே உள்ளனர் மக்கள்.

துணிவோடு இவற்றிற்கெதிராகக் குரல்கொடுக்க முடியாதா? எனப் பலரும் கேட்பது இயற்கை. ஆனுல் விவேகத்தோடு செயல்பட வேண்டுமாயின் அவரவர் தன் தன வேலையைச் செய்ய அனுமதித்து விட்டு பொறுமையோடு முடிவுக்காகக் காத்திருப்பதே உத்தமம் என்போரே அதிகம்.

இந்திய ஜவான்கள் ஒரு புறம், போராளிக்குழுக்களின் உறுப்பினர்கள் ஒரு புறம், பொதுநலவிரும்பிகள் ஒரு புறம் செத்துமடிந்துபோகும் சம்பவங்கள் அன்றாட நிகழ்வுகளாக உள்ளன. இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பணித்தளங்களிலே பூரணமாகத் தம்மைக் கையளித்தவர்கள். அதற்காக தம் உயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கிறுர்கள்.

தென்பகுதிப் பயங்கரவாதிகள் தமிழருக்கு உரிமையைக்கொடுக்க மறுத்து இலங்கை — இந்திய உடன்படிக்கையை எதிர்க்கிறுர்கள். சில தமிழ்ப் போராளிக் குழுக்கள் இந்த உடன்படிக்கையில் திருப்தியற்றவர்களாக இருக்கிறுர்கள். இந்திய அமைதிப்படையும், அவர்கள் சார்ந்த போராளிக் குழுக்களும் இந்திய மத்திய அரசின் திட்டத்தை நிறைவேற்ற முயலுகிறுர்கள். இந்த இழுபறியின் மத்தியிலே மாண்டவர்களின் எண்ணிக்கை இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துவிட்டது. இன்னும் எத்தனை உயிர்ப்பலிகள், நிரந்தரத்தீர்வுக்கு முன் கொடுக்கப்படவுள்ளன என எவரும் அறியார்.

உயிர்கள் அநியாயமாக பறிக்கப்படாத ஒரு சூழ்நிலை உருவாகவேண்டுமென்றுல் நிரந்தரத்தீர்வு ஒன்று அவசியம்.

வேறுபட்ட கருத்துக்களையுடைய சமூகத்திலே நிரந்தரதீர்வு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்க முடியுமா? எனவே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, போதுமென்ற மனம், தாராளகுணம் இவை இருக்கவேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினை பலவானுக்கு வெற்றி என்ற அடிப்படையில்தான் முடிவடையும் என்றே தோற்றமளிக்கிறது. எனவே தான், யார் இறுதிவரை நிலைத்திருக்கிறுர்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நோக்கம் நிறைவேறும்வரை, குழுக்களும் தனிநபர்களும் பயன்படுத்தப்படுவார்கள்; பலியாக்கப்படுவார்கள். காரணகர்த்தா இனங் காணப்படுமா?

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக் கொண்டற்று**

# "மீட்பரின் அன்னை" திருத்தந்தையின் சுற்றுமடல் (18)

## திரு உருவங்களின் வணக்கம் பற்றிய திருச்சபையின் கோட்பாடு

33. இந்த ஆண்டில் இரண்டாம் நீசேயா பொதுச் சங்கத்தின் (787) பன்னிரண்டாவது நூற்றுண்டு நிறைவு நிகழ்கின்றது. திரு உருவங்களின் வணக்கம்பற்றிய வாதப் பிரதிவாதங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, இந்தச் சங்கமானது, புனித தந்தையரின் போதனையின்படியும் திருச்சபையின் பொதுப் பாரம்பரியத்தின் படியும், திருச்சிலுவையுடன் தேவதாயாரின், புனிதர், தேவதூதர்களின் திருஉருவங்களும் விசுவாசிகளின் வணக்கத்துக்காக ஆலயங்களிலும் வீடுகளிலும் வீதியோரங்களிலும் வைக்கப்படலாம் என வரையறுத்துக் கூறியது. இந்த வழக்கமானது கீழ்த்திசையெங்கணும், மேற்கிலும் கூடத் தொடர்ந்து பேணப்பட்டு வந்துள்ளது. கன்னிமரியாளின் திருஉருவங்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. இவற்றில் மரியாள் பல்வேறு விதங்களில் சித்திரிக்கப்படுகிறுள்; ஆண்டவரை ஏந்தி அவரை மனுக்குலத்திற்கு அளிக்கும் சிம்மாசனமாக (Theotokos), கிறிஸ்துவிடம் அழைத்துச் சென்று அவரை வெளிப்படுத்தும் வழியாக (Hodegetria). பரிந்து பேசும் நிலையில் செபிக்கும் ஓர் உருவமாக, ஆண்டவரின் நாள்வரை விசுவாசிகளின் பயணத்தின்போது இறைப்பிரசன்னத்தின் அடையாளமாக (Deesis), மக்கள் மீது தன் மேலாடையை விரிக்கும் பாதுகாவலியாக (Pokrov), இரக்கமும் கருணையுமுள்ள கன்னிகையாக (Eleousa, அவள் சித்திரிக்கப்பட்டுள்ளாள் வழக்கமாக தனது திருக்குமாரனுகிய குழந்தை யேசுவை கையில் ஏந்தியபடி அவள் காட்சியளிக்கிறுள் குமாரனுடன் கொண்டுள்ள உறவே தாயை மகிமைப்படுத்துகின்றது. சில வேளைகளில் மகனை அன்புடன் அரவணைக்கிறுள் (Glykophilousa); வேறு சில சமயங்களில் வரலாற்றின் ஆண்டவராக விளங்கும்வரை ஆழ்ந்து தியானித்து வேண்டிக் கொள்ளும் வடிவயாகக் காணப்படுகிறுள் (தி. 59),

## ருஸ் நாட்டு விளாடிமீர் மாதா

புராதன ருஸ் நாட்டு மக்களின் விசுவாசப்பயணத்தில் தொடர்ந்து அவர்களுடன் கொண்டு செல்லப்பட்ட விளாடிமீர் மாதாவின் திருஉருவத்தைப்பற்றியும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். மாண்புமிக்க இப்பிரதேசங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டதன் ஆயிரமாண்டு நிறைவு அனுமித்துக் கொண்டிருக்கிறது. எளிய மக்கள், சிந்தனையாளர், புனிதர்கள் ஆகியோரின் நாடுகள் இவை. உக்ரைன், பைலோரஷ்யா, ரஷ்யா ஆகிய இடங்களில் பல்வேறு நாமங்களில் இவ்வுருவங்கள் இன்னும் வணங்கப்படுகின்றன. இறையன்னையின பிரசன்னத்தையும் பாதுகாவலையும் உணர்ந்த மக்களின விசுவாசத்திற்கும் செபபற்றுக்கும் இவ்வுருவங்கள் சான்று பகர்கின்றன. இவ்வுருவங்களில் கன்னிமரியாள் தெய்வீக அழகின் வடிவமாக, நித்திய ஞானத்தின் உறைவிடமாக, செபிக்கும் ஒருவரது உருவமாக, தியானத்தின் பிரதிமையாக, மகிமையின் வடிவமாக ஒளிர்கின்றுள். இவ்வுலக வாழ்விலே மனித சிந்தனைக்கு எட்டாத ஆன்மீக ஞானத்தை பெற்றிருந்த அவள் விசுவாசத்தின் மூலம் மிக மேலான ஞானத்தை அடைந்துகொண்டாள். [illegible] சுத்த ஆவிக்காகக் [illegible] கையில் [illegible] சேர்ந்து செபித்துக் கொண்டிருந்த மாடியறைக்கன்னியின் திருஉருவமும் என் நினைவுக்கு வருகிறது. சகோதரத்துவமான உரையாடலில் தங்கள் விசுவாசத்தின் கீழ்ப்படிவை ஆழமாக்க விரும்பும் சகலருக்கும் அவள் நம்பிக்கையின் சின்னம் ஆக முடியாதா?

திருச்சபையினது மாபெரும் பாரம்பரியத்தின் பல்வேறு பகுதிகளால் கட்டியெழுப்பப்பட்ட இத்தகைய புகழ்ச்செல்வமானது, திருச்சபை கிழக்கு, மேற்கு என்னும் தன் ''இரு சுவாசப்பைகளினுல்'' மீண்டும் முழுமையாக சுவாசிக்கக்கூடிய நாளை விரைவிற் கொண்டுவருவதற்கு எமக்குத் துணைபுரியலாம். நான் அடிக்கடி கூறியது போல் இ[illegible] சபைகள், திருச்சபைச்சமூகங்களுக்கும் இடையில் நடைபெற்றுவரும் உரையாடலில் முன்னேற்றம் காண்பதற்கு இது பெரிதும் துணைபுரியும் (ஐ ஒ. 19) மேலும், பயணம் செய்யும் திருச்சபை தலது புகழ்ப்பாடலைப்பாடவும், அதை நிறைவாகவாழவும் இது வழியாகவும் அமையும்.

## 3. பயணம் செய்யும் திருச்சபையின் புகழ்ப்பாடல்

35. ஆகவே, பயணத்தின் இன்றைய கட்டத்தில், தமது பாடுகளுக்குமுன் ஒற்றுமைக்காக செபித்த தனது ஆண்டவருக்குப் பணிவு காட்டும் பொருட்டுகிறிஸ்துவில் விசுவாசங்கொண்ட அனைவரது ஒன்றிப்பையும் திருச்சபை மீண்டும் கண்டடைய முனைகின்றது. ''அந்நிய நாட்டிலுள்ள ஒரு யாத்திரிகனைப் போல ஆண்டவர் வரும்வரை அவரது சிலுவையையும் மரணத்தையும் அறிக்கையிட்டு, உலகின் துன்பங்கள், இறைவனின் ஆறுதல்கள், இவற்றின் நடுவிலே திருச்சபை வழிநடந்து முன்னேறிச் செல்கின்றது'' (தி 8) ''ஊனின் வலுவின்மையால் நிறைவான பிரமாணிக்கத்திலிருந்து வழுவாமல் தன் ஆண்டவருக்கு ஏற்ற மணமகளாக அது திகழவேண்டும். சிலுவையின் வழி நடந்து, மறைவிலா ஒளியை அடையும்வரை தூய ஆவியால் தூண்டப்பெற்றுத் தன்னையே அது தொடர்ந்து புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இதற்காகவே சோதனைகள், துன்பதுயரங்கள் ஆகியவற்றின நடுவலே நடந்துசெல்லுபொழுது, ஆண்டவர் தனக்கு வாக்களித்த இறை அருளால் தேற்றப்படுகிறது'' (தி.9)

இறை மக்கள் ஒளியை நோக்கி மேற்கொள்ளும் விசுவாசப் பயணத்தின்போது அன்னையாகிய கன்னிமரி எப்பொழுதும் பிரசன்னமாகவே இருக்கிறுள். ''மக்னிபிக்காத்'' என்னும் புகழ்ப்பாடலில் இது ஒரு விசேட விதத்தில் எடுத்துக் காட்டப்படுகின்றது. எலிசபெத்தம்மாளைச் சந்தித்தபொழுது மரியாளினது விசுவாசத்தின் ஆழத்திலிருந்து பொங்கியெழுந்த இப்பாடல் காலங்காலமாக திருச்சபையின் இதயத்தில் ஓயாது எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. தினசரி மாலை வழிபாட்டுப் பாடலிலும், பன்முறை தனிநபர்கள், சமூகங்களின் பக்திமுயற்சிகளிலும் இது ஓதப்பட்டு வருவதே இதை எண்பிக்கிறது.

''என் ஆன்மா ஆண்டவரை
ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை
நினைந்து என்
இதயம் களிகூருகின்றது.
ஏனெனில் தாழ்நிலை
நின்ற தம அடி
மையைக் கடைக்கண்
நோக்கினுர்.
இதோ! இந்நாள்முதல்எல்லாத்
தலைமுறைகளும்
என்னைப் பேறுடையாள்
எனப் போற்றுமே.
ஏனெனில் வல்லமை மிக்கவர்
எனக்கு அரும பெரும்
செயல் பல புரிந்தார்
.....ஆதரித்தார்'
(லூக். 1:46-55)

36. எலிசபெத்தம்மாள் நசரேத்திலிருந்து வந்த தனது இளம் உறவினளை வாழ்த்திய போது மரியாள் தனது புகழ்ப் பாடலைக் கொண்டு பதிலிறுத்தாள். எலிசபெத்தம்மாள் தனது வாழ்த்தில் முதலில் அவளது வயிற்றினது கனியின் காரணமாக மரியாளைப் பேறு பெற்றவள் என அழைக்கிறுள். அடுத்து, அவளது விசுவாசத்தின் காரணமாக அவளைப் பேறு பெற்றவள் என்கிறுள்.
(லூக். 42, 45

## தமிழுக்கும் திருமறைக்கும் அருந்தொண்டாற்றிய புலவர்

# காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா

ஈழத்தமிழ்க் கத்தோலிக்க எழுத்தாளரில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழுக்கும் கத்தோலிக்கத் திருமறைக்கும் தனது எழுத்தாற்றலால் அரும்பணி ஆற்றிய புலவர்தான் காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா அவர்கள். 1914 ம் ஆண்டு காவலூரின் உதய திசையிற் பிறந்தவரான இவர் மாணவராய் இருந்தபோதே கவியாற்றல் பெற்றிருந்தார். சொல்நயமும் பொருள்நயமும் ஓசைநயமும் மிக்க கவிதைகளை எழுதி மதுரகவி எனப் பாராட்டுப்பெற்றவர். புனித சூசையப்பர் சபைத் துறவிகளிடம் கல்வி பயின்றமையால் தமிழ்அறிவு நிரம்பப்பெற்றவர். தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற பேராசானாய் விளங்கிய காலஞ்சென்ற S. சைமன் பிறதரிடம் தமிழ் கற்றுப் பா எழுதும் பயிற்சியும் பெற்றார். இலக்கண இலக்கியங்களிற் பாண்டித்தியம் பெற்றுச் சொல்வளம் பொருள்வளம் மிக்கவராக விளங்கினார்.

புலவரவர்கள், 19 வயதிலேயே கவிபாடும் வரம் பெற்றுவிட்டார் எனலாம். கவிதை எழுதுவதில் அருட்சகோதரர் S. சைமன் அவர்கள் மாணவன் செல்வராசாவை ஊக்கப்படுத்தி வந்தார். வளர்பிறை போல் அவரது கவியாற்றல் வளரத் தொடங்கியது. புனித அந்தோனியார் கல்லூரியில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பலவற்றையும் எழுதினார்.

முதன்முதலில் இயேசுவின் பாடுகள் பற்றிய ஒப்பாரி ஒன்றைப்பாடினார். “சிந்தாகுலமாலை” என்ற இந்த ஒப்பாரி நூலே இவரதுமுதல்நூலாகும். புலவரவர்கள் நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதியுள்ளார். அவர் கவிஎழுதுவதில் மாத்திரமல்லர் வரலாற்றிலும் ஆர்வம் மிக்கவர். பண்டைய கிறிஸ்தவர்களின் வரலாற்றை, மன்னார், யாழ்ப்பாணம், மாதோட்டைப்பகுதிகளில் போத்துக்கேய, ஒல்லாந்தர் கால திருமறை வரலாறுகளை ஆராய்ந்துபார்த்தவர். யாழ் புதுமைமாதா ஆலயவரலாறு, யார் நாட்டுக்கூத்து, புனித ஜேம்ஸ் நாட்டுக்கூத்து, பண்டாரவன்னியன் முதலிய பல நாடகங்களை இயற்றிப் புகழ் பெற்றார். இவற்றுள் ஞானசவுந்தரி, பண்டாரவன்னியன் இரண்டும் பலமுறை மேடையேற்றப்பட்டு அவருக்கு அழியாப்புகழை ஈட்டித் தந்தன.

கோவில்களிற் பாடப்படும் திரை விருத்தங்கள், தேவாரங்கள் பலவற்றையும் எழுதிக் கொடுத்தார். இவர் எழுதிய ஞானசவுந்தரி நாட்டுக்கூத்து நூலுருவில் வெளியிடப்பட்டது. இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்குமுன் இவர் எழுதிய கல்லறைக் கண்ணீர் என்ற நூல் கிறிஸ்து பெருமானின் பாடுகளை உருக்கமாக விபரிக்கின்றன. ஒப்பாரி, புலம்பல், அம்மானை என்றகவிதை வடிவங்களில் அவை தவக்காலத்திலும் மரணச்சடங்குகளிலும் பாடப்பட்டு வருகின்றன. சத்திய வேத பாதுகாவலனிலும் பல கவிதைகளையும், கட்டுரைகளையும் அவ்வப்போது எழுதியுள்ளார். “டோருச்சுவாமியாரும் மாட்டுவண்டியும்”

**முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது**

சாட்டி சிந்தாத்திரைமாதா வரலாறு, சின்னமடுமாதா ஆலயவரலாறு என்பனவற்றை எழுதினார். சதாசகாயமாதாவின் மன்றாட்டுமாலையை இயற்றினார். அண்மையில் கரம்பொன் வேளாங்கண்ணிமாதா ஆலயவரலாற்றையும் எழுதினார்.

தென்மோடி நாட்டுக்கூத்தில் ஆர்வங்கொண்டு தீந்தமிழ்க் கவிஆற்றலை வெளிக்காட்டிப் பல நாடகங்களை எழுதினார். தமிழரின் அழியாத கலையாகத்திகழும் நாட்டுக்கூத்துக்குப் புத்துயிர் கொடுத்த நற்றமிழ்க்கவிஞர் ஞானசவுந்தரி, புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து, புனித அந்தோனி என்னும் கட்டுரை சில ஆண்டுகளுக்குமுன் காவலனில் வந்தது பலருக்கு ஞாபகமிருக்கலாம்.

இவரது அந்திமகாலத்தில் 1983 இல் இவர் எழுதிய “பனைநாடகம்” என்னும் நாட்டுக்கூத்து நாடகம் கைஎழுத்துப் பிரதியாக பனைவளப்பகுதியினரிடம் உள்ளது என அறிகிறோம். அது நூலுருப் பெறாமலும் மேடை ஏற்றப்படாமலும் இருப்பது பெருங்குறையாகும். பனைவளப்பகுதியினர் இனியாவது ஆவனசெய்வார்களா?

தமிழுக்கும், கத்தோலிக்கத் திருமறைக்கும் அளப்பரும் பணியாற்றிய புலவர் வறுமை

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# கிறிஸ்தவ சமயம் க. பொ. த. (உ|த)

7. இறைவனது தேர்வும் அழைப்பும் மனித நோக்குகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டது தனித்துவமானது 'இக்கூற்றை யாக்கோப்பின் வாழ்வோடு தொடர்புபடுத்தி விளக்குக.

ஆபிரகாமின் ஏக புதல்வன் ஈசாக்கிற்கும் அவர் மனைவி இரெபேக்காளுக்கும் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் மூத்தவன் ஈசோ. இளையவனே யாக்கோபு. இருவரும் தாய்வயிற்றில் இருக்கும் போதே போர் புரியத் தொடங்கி விட்டனர். இறைவன் ஒரு குடியை மற்றொரு குடி மேற்கொள்ளும் என்றும் மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருப்பான் என்றும் முன்னறிவித்தார். ஈசோ மூத்தவன் அடர்ந்த உரோமம் உடலில் உள்ளவன். உடல்பலம் உள்ளவன். ஈசாக்கின் செல்லப்பிள்ளை ஆவான். யாக்கோபு [illegible]ரியன் அழகானவன், [illegible]டு [illegible]ம் கொண்டவன். இரா[illegible]பேக்காவின் அன்பு மகன். [illegible] வோம் [illegible]

ஒருநாள் யாக்கோபு தான் தயார் செய்த உணவை களைத்துப் போய் வீடுவந்த தமையனுக்கு கொடுத்து தந்திரமாக அவனிடம் இருந்து மூத்தவனுக்குரிய பிறப்புரிமையை வாங்கிக் கொண்டான். ஈசோ அற்ப உணவுக்காகத் தனது பெரிய உரிமையை இழந்தான். அத்தோடு யாக்கோபு இறைவனின் அன்புக்கு உரியவனாவதையும் காணலாம். இதன் மூலம் இறைவன் தான் தேர்ந்தெடுத்தவை அனைத்தும் மனிதனின் நோக்கங்களிலும் எதிர்பார்ப்புகளிலும் இருந்து வேறுபட்டவை என்பதை இந்நிகழ்ச்சியின் ஊடாக தெளியப்படுத்துகின்றார்.

முதுமையில் கண்பார்வை மங்கியிருந்த ஈசாக் [illegible]ன் [illegible]சை மகன் ஈசோவை ஆசீர்வதிக்க முற்பட்டபோது யாக்கோபு தன் தாயின் சூழ்ச்சியால் பல பொய்கள் கூறி தந்தையின் இறுதி ஆசீரைப் பெற்றான். இவ்வாறு யாக்கோபு ஈசோவின் வாரிசுரிமையையும் தந்தையின் இறுதி ஆசீரையும் பெற்றான். இதில் யாக்கோபின் நடத்தையையும் தாய் இரெபேக்காளின் தந்திரத்தையும் ஆசிரியர் புகழவில்லை. ஆனால் எவ்வாறு இறைவன் தனது தேர்தலையும் அழைத்தலையும் மனிதன் எதிர்பார்ப்பதற்கு மாறாக, மக்கள் பலவீனத்தினாலோ, தீய மனப்பான்மையினாலோ செய்யும் குற்றங்களைப் பயன்படுத்தி, இறுதியில் தம் திட்டம் நிறைவேறச்செய்கின்றார் என்பதைக் காணலாம். மேலும் இறைவன் வாக்குறுதி மக்கள் எதிர்பார்ப்பது போல் தலைமுறை தலைமுறையாகவல்ல. ஆனால் அவரின் தனிப்பட்டதெரிவிலிருந்து நிறைவேறுவதையும் அவதானிக்கலாம்.

தன் பிறப்புரிமையையும், வாரிசுரிமையையும் யாக்கோபு பற்றியதை உணர்ந்த ஈசோ அவனைக் கொல்ல திட்டமிட்ட வேளை தாய், யாக்கோபுவை தன் அண்ணன் லாபானிடம் அனுப்பி விடுகின்றாள். காரணம் தம் இனத்தவருள் ஒருவரை மணக்கவேண்டும் என்பதே யாகும்.

(ஆதி. 28: 10) மொசப்பத்தேமியாவை நோக்கி யாக்கோபு செல்லும்போது முக்கிய சம்பவம் நடைபெற்றது. இதில் யாக்கோபு நடந்து [illegible]கொண்டிருந்த வேளை ஒரு மாலைப்பொழுது இளைப்பாற ஒரு கல்லைத் தலையணையாகப் பாவித்து படுத்து நித்திரை செய்தான். அப்போது அவன் ஒரு கனவு கண்டான். ஓர் ஏணி சாத்தப்பட்டிருந்தது. அதன் ஒரு முனை பூமியைத் தொட்டது. மறுமுனை வானத்தைத் தொட்டது அதன்மேல் வானதூதர் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர். ஏணியின் மேல் முனையில் இறைவன் அமர்ந்திருந்தார். அப்போது இறைவன் யாக்கோபுவை நோக்கி “நாம் உன் தந்தை ஆபிரகாமின் கடவுளும், ஈசாக்கின் கடவுளுமான ஆண்டவர். நீ தங்கியிருக்கும் இப்பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவோம். உன் சந்ததி நிலப் புழுதிக்கு ஒக்கும். உன்னால் உன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும். நீ எங்கு சென்றாலும் உனக்கு நாம் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச்செய்வோம் உன்னைக் கைவிடமாட்டோம்” என்றார்.

இந்நிகழ்ச்சி யாக்கோபுவின் வரலாற்றில் முக்கியமானது; அவரை அழைத்தது மட்டுமல்ல அவருக்கருகில் இறைவன் இருப்பதை உணர்த்தியது இக்கனவு இறைவனுக்கும் தனக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அறிகின்றார். இங்கு இறைவன், மனிதர் எதிர்பார்ப்பதுபோல் மூத்தவனை தெரிவுசெய்யாமல், இளையவனைத் தெரிந்தெடுப்பதைக் காட்டுகிறது.

யாக்கோபு மீண்டும் பிரயாணத்தை மேற்கொண்டு தன் மாமன் வீட்டையடைந்தார். லாபான் அவரைச் சந்தோஷமாக வரவேற்றான். மாமனுக்கு இரு புதல்விகள். மூத்தவள் லீயாள் பீளைக் கண்ணுடையவள், இளையவள் இராக்கேல். வடிவழகும், முக எழிலும் உள்ளவள், யாக்கோபு இவளையே விரும்பினார். இதற்காக ஏழு ஆண்டுகள் லாபானிடம் வேலை செய்தார், ஆனால், இறுதியில் கபடமாக மூத்தவளை அவனுக்கு முடித்து வைத்தான். ஏமாற்றப்பட்ட யாக்கோபு மீண்டும் இராக்கேலுக்காக ஏழாண்டுகள் வேலை செய்தார். ஆனால் யாக்கோபு லாபானோடுஇருந்த வேளையில் தான் லாபானின் உடமைகள், சொத்துக்கள் அதிகரித்தன இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட யாக்கோபால் தான் தன்னை ஆண்டவர் ஆசீர்வதிப்பதை லாபான் உணர்கின்றான். இங்கும் நாம் இறைவன் யாக்கோபுவின் எதிர்பார்ப்புக்கு மாறாகச் செயல்படுவதைக் காண்கிறோம்.

மீண்டும் யாக்கோப்பிற்கு பல மகப்பேறுகள் கிடைத்தன பின் யாக்கோபு தம் மனைவி, மக்களுடன் தாயகம் திரும்புமுன் தனக்கென உடமைகளைச் சேகரித்து தன் குடும்பத்தவருடன் ஒருவருக்கும் தெரியாது புறப்பட்டார். ஏனென்றால் அவருடமைகளை லாபானும் குடும்பத்தவரும் அபகரிக்க இருந்தனர். இதையறிந்து லாபானும் பிள்ளைகளும் அவரை பின்தொடர்ந்து வந்தனர். யாக்கோபுவுக்கு எதிராக எதுவும் செய்யாதே “என இறைவன் லாபானை இறைவன் எச்சரித்தார். இதற்கு காரணம் இறைவனால் அழைக்கப்பட்டு தேர்தெடுக்கப்பட்டவராவார். மனிதன் எதிர்பார்த்ததை விட்டுக் கடவுள் அவரை வேறு விதமாக சித்தரிக்கின்றார். யாக்கோபு தாயகம் திரும்பிச் செல்லும் வழியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இனம் தெரியாத ஒருவருடன் போராடிய நிகழ்ச்சி, அவன் தன்னாலே யாக்கோபுவை வெல்ல முடியாதென்று கண்டு யாக்கோபுவின் தொடை நரம்பைத் தொடவே அது மரத்துப் போய் விட்டது. போராடியவர் ‘நீ தேவனோடு போராடி மேற்கொண்டாய்: ஆகவே இனி இஸ்ராயேல் என்று அழைக்கப்படுவாய்’ என்று கூறி ஆசீர்வதித்தார். இச்சம்பவம் யாக்கோபு மனிதர்எதிர் பார்த்ததை விட்டு அவர் மனிதருடன் நல்ல முறையில் தொடர்பு கொள்வார் என்பதையும், இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பதையும் விளக்குகின்றது. இதைவிட இறைவன் மனித எதிர்பார்ப்புகளுக்கும், நோக்கங்களுக்கும் அப்பாற்பட்டது என்பதை உணர்த்தவும் அவரை தமக்கு சொந்தமாக்கவும் அவருடைய பெயரை மாற்றுகின்றார். (ஆதி. 32 22)

ஆபிரகாமின் பின் இறைவனால் அழைக்கப்பட்டவரான யாக்கோபு மிக முக்கியமானவர். மூத்த மகன் ஈசோவை விட்டு இறைவன் இளைய மகன் யாக்கோபுவை தேர்ந்தெடுத்து மனித நோக்கங்களிலும் எதிர்பார்ப்புகளிலும் இருந்து வேறுபட்ட முறையில் அவரை தம் மீட்புத் திட்டத்தில் இடம் கொடுப்பது முக்கியமானது. மனிதிட்டங்களுக்கு அப்பாற்பட்ட இத் தேர்வுகளை இறைவன் சிறப்பிக்கின்றார். இறைவன் தாம் விரும்பியவர்களைத் தேர்ந்தெடுத்தே அவர்களோடு தம் வாக்குறுதியை புதுப்பிப்பதை நாம் காண்கின்றோம். உடன்படிக்கை தலைமுறை தலைமுறையாக அல்ல இறைவன் தாம் விரும்பியவருடாகவே தம் திட்டங்களைச் செயல்படுத்துகின்றார். ஆபிரகாமையும், ஈசாக்கையும் தெரிந்தெடுத்து, காத்து வழி நடத்தியவரே யாக்கோபுவையும் தெரிந்தெடுத்து, காத்து நடத்துகின்றார். யாக்கோபுவின் வாழ்க்கை பூராவும் இறைவனின் செயல்கள் அனைத்தும் மனித நோக்குகளிலும் எதிர்பார்ப்புகளிலும் அப்பாற்பட்டது தனித்துவமானது, புனிதமானதாகக் கருதப்படுகின்றது.

அந்தோனிப்பிள்ளை வேனி
தி. கு. க. மடம்,
இறம்பைக்குளம், வவுனியா.

# சாவின் பிடியில் ஒரு ஜீவன்

## சிறுகதை

அன்று ஒருவாறு சிரமப்பட்டு வைத்தியசாலையில் துயில் கொண்டிருந்தான் இன்பன். விடியற்காலையில் வைத்திய சாலையின் அருகில் இருந்த கோயிலில் மணிகள் ஒலித்துக் கொண்டிருந்தன. அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதை நினைவூட்டியது அந்த மணி ஓசைகள். இன்பன், பிதா, சுதன், போட்ட கைகளை எடுக்க முடியாதவனாய் ஒருவாறு சிரமப்பட்டு தன் மனதினால் பிதா சுதன், பரிசுத்த ஆவியைப் போட்டு தன் குலதெய்வத்திடம் வேண்டிக்கொண்டான். அவ்வேளையில் அவன் நினைவலைகள் கடந்தகால வாழ்க்கையில் சஞ்சரிக்கத்தொடங்கின.

அந்த அழகிய கிராமத்தில் இன்பனின் குடும்பம் ஒரு ஒளி விளக்காக விளங்கியது. எல்லோருக்கும் வேண்டிய ஒரு குடும்பமாக இறைபக்தியும், சமூகதொண்டும் ஊறப்பெற்ற குடும்பம். சமூக தொண்டையே கடமையாகக்கொண்டு விளங்கிய ஒரு குடும்பம். இன்பன் 8ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் தங்கை சாந்தி 6ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். காலங்கள் உருண்டோடின. இன்பன் வளர்ந்து G.C.E, சாதாரண தரத்தில் சித்தி பெற்றுவிட்டான். தந்தையோ சமூக சேவையில் ஈடுபட்டு உழைத்தார். சிறிய வயல் ஒன்றுதான் அவர்களின் உடமையாய் இருந்தது, அதில் இருந்துவரும் ஊதியத்தில் எளிமையான முறையில குடும்பத்தை நடாத்தி வந்தார். அவர் கண்களில் ஏழைகளைக் கண்டுவிட்டால்போதும், தனக்குள்ளவற்றையும் கொடுத்துவிடுவார். தாயோ பலவித கூட்டங்களில் பங்கெடுத்து பிரிந்த குடும்பங்களையும் வாழ வழியின்றி இருக்கும் குடும்பங்களையும் வாழவைப்பதில் இன்பம் கண்டாள். உயிருக்குயிராக தனது பிள்ளைகளை நேசித்து வந்தாள்.

இன்பன் G.C.E உயர்தரப் பரீட்சை எடுத்துவிட்டான். நாளுக்குநாள் அதிகரித்து வந்த தாய்நாட்டின் அட்டூழியங்களையும், அநியாயங்களையும் நாள் தோறும் பத்திரிகைகளில் வாசித்து வருவான். அவ்வேளைகளில் அவனுக்கு அதிர்ச்சியும், ஆத்திரமும் பொங்க கண்களில் நீர் ததும்பும். தன் போராட்ட உணர்வுக்கு கல்வி தடையாய் இருப்பதை நினைத்து வருந்துவான். எப்போது பரீட்சை முடியும் என்று இருந்த அவனுக்கு ஒரு விடிவு கிடைத்ததுபோல் பரீட்சையும் முடிந்துவிட்டது. ஒரு நாள் தாய் தநதையரிடம் வழமையாகப் "போய்வருகிறேன்" என்று சொல்லும் வார்த்தைகளையே சொல்லிவிட்டுப் புறப்பட ஆயத்தமானான். சாந்தியின் நினைவு வரவே, அவளிடம்சென்று "சாந்தி போயிட்டு வாறனம்மா" என்று புன்னகைத்தான். அவளும் தலையை அசைத்துப் புன்னகைத்தாள். ஒரு நாளும் தனனிடம சொல்லாத அண்ணாவை நினைத்து அவளுக்கு புதுமையாக இருந்தாலும் உள்ளத்தில் சந்தோஷமடைந்தாள். ஏனென்றால் அவள் தன் அண்ணாவின் வார்த்தைகளை ஆவலோடு கேட்பவள். தாய், தகப்பன் தங்கள் மகனின் செயலை எதிர்பார்க்கவே இல்லை.

போன இன்பன் இரண்டு மூன்று நாட்களாகியும் வீடு திரும்பவில்லை. தாயும், தந்தையும் அவனின் நண்பர்களிடம் சென்று விசாரித்தார்கள். எல்லோரும் கைவிரித்துவிட்டனர். ஏமாற்றத்துடன் திரும்பி வந்த அவர்களுக்கு அடுப்பில் நெருப்பு மூட்டக்கூட மனம் வரவில்லை. ஒருவாறு நித்திரையின்றி ஐந்தாவதுநாளும் வந்துவிட்டது. தாய், வீட்டு வாசலையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். நேரம் பத்துமணியிருக்கும் தபால்காரன் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்தான். அவள் அது தன் மகனின் கடிதமாகத்தான் இருக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள். கடிதத்தை விரித்துப் படித்தாள். அன்புள்ள அம்மா, அப்பா, தங்கை சாந்திக்கு என்றவார்த்தைகள் அவள் உள்ளத்தைக் குளிரவைத்தன. "மேலும் அம்மாவிற்கு" என்று பின்னால் எழுதியிருந்தவற்றை அவசர அவசரமாகப் படிக்கின்றாள்கள். அம்மா! இந்தமண்ணின்புனிதத்தைக் காக்க எத்தனை இளைஞர்கள் இன்று தங்களைத் தியாகம் செய்கின்றனர். அதில் நானும் ஒருவனாக இருப்பதைப் பற்றி நீங்கள் பெருமைப்படவேண்டும். "உரிமைகள் வேண்டாம். வெறும் சோற்றுப்பிண்டங்களாய் வாழ்ந்துவிட்டுப் போகின்றோம். உணவே போதும் எயக்கு எனக்கோஷம் போடுவோம்' என்று எதிர்பார்க்கும் அந்த அதிகார மிலேச்சர்களின் வெறியை அடக்க இன்று நானும் ஒரு போராளியாக மாறிவிட்டேன்- அம்மா மனதில் உறுதியாய் இருங்கள், என்று தனது கடிதத்தை முடித்திருந்தான். எப்படியிருந்தாலும் தாய் உள்ளமல்லவா? பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று கூறுவார்கள். பித்துப் பிடித்த தாயின் மனம் குமுறி அழத்தான் செய்தது.

மகனின்மேல் உயிரையே வைத்திருந்த தகப்பனுக்கு பெரும் ஏமாற்றம் மேலிடவே, அன்றில் இருந்து அவரும் குடிப் பழக்கத்தை ஆரம்பித்தார். முதல் குடி குறைவாக இருந்தாலும் நாளடைவில் தன் சுயநிலை மறக்கும் அளவிற்கு குடிக்கும் பழக்கமும் அதிகரித்துவிட்டது. குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது. தந்தை நாளடைவில் பொறுப்பற்றவராக மாறிவிட்டார். சாந்தி கல்வியைக்கைநழுவவிட்டாள். தாயும், மகளும் கூலி வேலை செய்ய ஆரம்பித்தனர். தந்தையின் குடி மிகவும் வேதனையாய் இருந்தது. இவ்வாறு குடிப்பதால் தங்கள் கவலைகளை மறக்க முடியும் என்ற நப்பாசையில் இன்று எத்தனை தந்தையர்கள் தமது குடியினால் குடும்பத்தையே குட்டிச்சுவராக்கிக்கொண்டு இருக்கின்றார்கள். எத்தனை தாய்மார்கள் கணவனின் குடியினால் தங்கள் கற்பையே விலைக்குவிற்று விபச்சாரத்தையே ஒரு கலாச்சாரமாக மாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். குடும்பத்தின் குல விளக்காய் திகழவேண்டிய பெண்கள் எல்லாம் நாகரிக உலகில் சஞ்சரித்துக்கொண்டு இருக்கின்றார்கள். தந்தையின் குடிக்கும், தன் குடும்பம் வறுமையில் சிக்குவதற்கும் தான் தான் காரணம் என்பதையும், தான் அந்த நிலைக்கு வருவதற்கு தன் தாய்நாட்டின் விதியே காரணம் என்பதையும் நினைத்துக் கண்ணீர் சொரிவதைவிட வேறு வழி அவனுக்குத் தெரியவில்லை.

தன் தந்தை தாயிடம் இருந்து உதவிபெற்றவர்கள் எல்லாம் இன்று திரும்பிக்கூடப் பார்க்காத நிலைக்கு ஆளாகி விட்டது அந்தக் குடும்பம்.

செல்வி ஆன் மேரி ஜஸ்மின்
6-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

அன்று எத்தனை குடும்பங்களை வாழவைத்த குடும்பம் இன்று வாழ வழியின்றி நடுத்தெருவில் நிற்கின்றது. நன்றிகெட்ட சனக்கும்பல் அன்று யேசுநாதரைப் பார்த்துச் சிரித்தது போல் இன்றும் அந்தக் குடும்பத்தைப் பார்த்துச் சிரிககின்றது. எத்தனை குடும்பங்களுக்கு உணவளித்த குடும்பம் இன்று ஒருவேளை கஞ்சிக்குக்கூட வழியின்றித் தவிக்கின்றது. கடன் என்று கேட்டுவிட்டால் வட்டியைத் தலைக்குமேல் அறவிடுவார்கள். இன்று எத்தனை ஏழைகளின் வியர்வையையும், இரத்தத்தையும் இந்த வட்டிகள் உறிஞ்சுகின்றன. கோயிலுக்குச் சென்றுவிடுவார்கள். ஏழைகளை நசுக்கி அவர்களின் உழைப்பில் தங்கள் சௌகரியத்தை அனுபவித்து வரும் அந்த மனித மிருகங்கள், ஏதோ நல்லவர்கள்போல் நடிப்பார்கள். உள்ளிற்கோ பறித்துச் செல்லும் ஓநாய்கள். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் மண்ணில் உதித்தார் உத்தமன் யேசு. தன் பகைவனையும் மன்னித்து வாழ்வு கொடுத்த தெய்வம். இன்று அந்த யேசுவின் பெயரைச்சொல்லி வாழும் எத்தனை போலிக் கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். தனக்கு உதவி செய்த குடும்பத்தையே ஏறெடுத்துப் பார்க்காமல், கடைக்கண்ணால் பார்த்து விட்டுச் செல்லும் சமுதாயம் எப்படி அந்த உத்தமன் யேசுவைப் பின்பற்றமுடியும். அன்று இன்பனின் தந்தையின் [illegible] மாடமாளிகைகளைக் கட்டியோர் எத்தனை பேர்; மாடமாளிகைகள் இருந்தென்ன, கூட கோபுரங்கள் இருந்தென்ன. உள்ளங்கள் கூனிக் குறுகி குட்டிச் சுவராகி தன்னலமும் தற்பெருமையும் தாண்டவமாடும் உள்ளங்களில் இவைகள் இருந்துதான் என்ன பயன். உள்ளங்கள் மாளிகைகள் ஆகவேண்டுமே. இவ்வாறு சிறிது காலம் சென்றது... சமாமான ஒப்பந்தம் என்று அமைதிப்படை பெரும்படையாக வந்து நாட்டிலே பல செயல்களைச் செய்துகொண்டிருக்கும் வேளை ஒரு நாள் அந்தக் கிராமத்திற்குள் தமது வாகனங்களில் பெரும் இரைச்சலுடன் விரைந்துகொண்டிருந்தனர். யாரோ எட்டப்பன் பரம்பரையைச் சேர்ந்தவன் அந்த இன்பனின் வீட்டைக் காட்டிக் கொடுத்தான். வெளியில் நின்றவாறே அந்த வீரர்கள் துப்பாக்கியை நீட்டி குண்டுகளைத் தீர்த்தனர். "அம்மா" என்று அலறியபடி சாந்தி தரையிலே வீழ்ந்தாள். அவளை அணைக்கச்சென்ற தாயின் மார்பிலும் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தன. அவ்விடத்திற்கு ஓடிவந்த தந்தையும் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார். மூவரது உடல்களும் இரத்த வெள்ளத்தில் ஆண்டவன் சந்நிதியில் சங்கமமாகின. அன்றுவரையும் திரும்பிக்கூடப்பார்க்காத சனக்கும்பல் அன்று ஒப்பாரி வைத்துப் பாசாங்கு செய்தது.

தன் குடும்பத்தின் இழப்பை கேள்வியுற்ற இன்பன் வீடு தேடி ஓடி வந்தான். [illegible] இரத்தக் கறை படிந்த [illegible] கல்லறையை நோக்கி ஓ[illegible] "அப்பா... அப்பா... சாந்தி..." என்று கதறிக் கதறிஅழுதான், புரண்டான் அவனால் என்ன செய்ய முடியும். நஞ்சருந்தித் தன்னையும் அழித்துவிட நினைத்தான். இருந்தும் தாய் நாட்டின் மீதுகொண்ட அன்பினால் ஒருவாறு தன் முடிவை மாற்றிக்கொண்டான். அதிர்ச்சியும், ஆத்திரமும் மேலிட்டவனாய் சமூக விரோதிகளை அழிப்பதற்குப் புறப்படுகின்றான் ஆனால் எம் இளைஞர்களே எமக்கு கொள்ளி வைக்கின்றார்கள் என்பதை மறந்துவிட முடியுமா? போராட்டங்கள் நாளடைவில், தன்னலமும், தற்பெருமையும், தான்தோன்றித்தனமும் உடையனவாய் மாறிக்கொண்டிருந்தது என்பதை இன்பனுக்கு நடந்த செயல் நினைவூட்டியது. அவன் செல்லும்போதே வேறு இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளின் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக்காகி படுகாயங்களுக்குள்ளானான். இவ்வாறு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான். இன்றோ, நாளையோ அவனது உயிர் பிரிந்துவிடும் என்பது திண்ணம். இத்தனை இழப்புக்கள், துன்பங்கள் மத்தியிலும் நமது போராட்டம் சுயநலத்தின் அடிப்படையில் சென்றுகொண்டிருப்பதை நினைத்து கண்கலங்கினான். அவ்வேளையில் வைத்தியரின் காலடி அசைவுகள் அவன் காதில் ஒலிக்கின்றன. தன் சிந்தனையில் இருந்து மீண்டவனாய் வைத்தியரின் வரவை எதிர் நோக்கினான். எனினும் தனது ஜீவன் (உயிர்) சாவின் பிடியில் இருப்பதை அவன் உணர மறக்கவில்லை.

---

தேனருவி:

## ஆண்டின் 12ஆம் ஞாயிறு (19-6-88)

## இறைவன் தூங்குகிறாரா?

யோபு 38: 1, 8—11 2 கொரி 5: 14—17 மாற். 4: 35-40

வியட்னாம் வாழ் மக்கள் அனுபவித்த கசந்த காலங்கள் பற்றி நாம் நன்கு அறிவோம். இவர்களது ஆலயத்தில் இறைவன் உண்டு எனப் பல வாதங்களுடன் மறையுரையாற்றிய குருவிடம் ஒருவர் சென்று கூறினார். "சுவாமி, இறைவன் உண்டு என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், அந்த இறைவன் இத்துன்ப வேளையில் எமக்குத் தூரத்தே இருப்பதாகவே உணருகின்றோம்." ஆம். பெரும்பாலான மக்கள் இறைவன் இல்லை என்று கூறும் நாஸ்திகராகவில்லை. ஆனாலும் இறைவன் தம்மைக் கைநெகிழ்ந்து விட்டதாகவும் இறைவன் தூரத்தே வாழ்வதாகவும், தூங்குவதாகவுமே உணருகின்றார்கள். யேசுவின் சீடர்களும் புரிந்த போர் இருவகை. ஒன்று கடலின் கொந்தளிப்பும் புயற்காற்றும், மற்றது அவர்களது விசுவாசப் பயணத்தில் ஒரு தளர்ச்சியும் தடுமாற்றமும். காற்றையும் கடலையும் மட்டுமல்ல. அனைத்தையும் படைத்து ஆளும் வல்லதெய்வத்திடம் சரணடைந்தால் போரில் வெற்றியுண்டு. வாழ்வில் அமைதி உண்டு.

இதை விடுத்து தெய்வத்திற்கு அக்கறையில்லை என அவரை நொந்து கொள்ளலாமா? அதுமட்டுமல்ல பலர் இறைவனை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு இரகசியமாக வித்தைச்சாரரிடம் ஓடுகிறார்கள். இவர்கள் குறுக்குவழியை நாடிக்கொண்டு; கோவிலுக்குப் போகிறோம், சற்பிரசாதம் பெறுகிறோம், காசு கொடுக்கிறோம என்று சொல்லி தாங்கள் தான் திருச்சபையின் தூண்கள் எனப் பெருமையும் பேசுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் உள்ளத்திற்றான் இன்று பெரும் புயலும் கொந்தளிப்பும் விசுவாசப் போராட்டத்தில் தோற்றுவிட்டார்கள் போலும். "இன்னும் உங்களுக்கு விசுவாசம் இல்லையா?"

ஆண்டவன் தூரத்திலும் இல்லை தூங்கவும் இல்லை. நாம் தான் தூரத்தே ஓடுகின்றோம். இயற்கையின் பெரும் சக்திகளையெல்லாம் வார்த்தையால் படைத்து அடக்கியாளும் இறைவனில் யோபு கொண்ட விசுவாசம் மெச்சத்தக்கது.

வாழ்க்கைப் பயணத்தில் எழும் கொந்தளிப்புக்களில் தோல்விகளும ஏமாற்றங்களும் வரலாம். ஆனால் விசுவாசம் தோற்றுவிடடால் வாழ்வில் எதுவும் மிஞ்சாது. எனவே பேரமைதியை உள்ளங்களுக்கும் உலகத்திற்கும் தரவலல ஆண்டவனிடம் முறையிடுவோம். விடாமுயற்சியுடன் அவரையே அண்டிச் செல்வோம்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

வாசக நேயர்களே,

வேதாகமத்திலே "சட்ட நூல்கள்" (தோரா) "சரித்திர நூல்கள்" பற்றிய விளக்கங்களை, "அருள்வாக்கு அறிவோம்" பகுதியிலே படித்துத் தெரிந்துகொண்ட உங்களுக்கு... கடந்த 17 வாரங்களாக, தனது ஆழ்ந்த அறிவினாலும், அனுபவ முதிர்விலும், ஞான நூல்களில் ஐந்து நூல்களை (யோபு, பழமொழி, சங்கத்திருவுரை, சீராக், ஞானாகமம்) உங்களோடு பகிர்ந்து கொண்ட அருள் சகோதரன் இயூஜின் பிரான்சிஸ் அவர்களை எமது "திருமறைப் பணி நிலையம்' நன்றி உணர்வுடன் நினைவுகூர்கிறது.

தனது படிப்பு, வேலைகள் மத்தியிலும் நாம் வேண்டிக் கொண்டதற்கிணங்க மன உவப்புடன் முன்வந்து, பிரச்சனையான காலகட்டத்திலும் மனந்தளராது — அவர் ஆற்றிய சேவையை நாம் பாராட்டாது இருக்க முடியாது.

"ஞான நூல்கள்" என்பது ஒரு குறிப்பிட்ட நூல்களை மட்டும் உள்ளடக்கியதாக அல்ல, வேதாகமம் முழுவதிலுமே ஞானத்தைப்பற்றிச் சுட்டிக்காட்டப்படும் இடங்களையெல்லாம் பொதுக்கண்ணோட்டத்தில் உற்றுநோக்கி, தெளிந்த ஞானத்துடனும், ஆழ்ந்த புத்திக்கூர்மையுடனும் தன் அனுபவங்களை வாசக நேயர்களோடு பகிர்ந்தளித்திருக்கிறார்.

ஞானிகள் பெரும்பாலும் அலட்டிக் கொள்வதே இல்லை, மாறாக அடக்கமான சுபாவமும், அணித்தரமான கருத்துக்களையும் கொண்டிருப்பார்கள். இதுபோலவே எமது சகோதரனும பேச்சிலும் நடையிலும் அமைதியான ஒருவராகவும் 'நிறைகுடம் போல் தளம்பாத சுபாவப்போக்கும் உடையவர்.

அன்னாரின் சேவைக்காக.. அழைத்தலுக்காக தனது வாழ்வினாலும் வார்த்தையினாலும் எழுத்தாற்றலினாலும் இறை மக்களைத் தட்டியெழுப்ப, இறையருளை வேண்டுவோம்.

இனி...? "இறைவாக்கினர்" பகுதிக்குச் செல்வோம். ...ரிய பொறுப்பை ஆவலோடும் ஆர்வத்தோடும் உங்க...டு பகிர்ந்து கொள்ள முன்வந்திருக்கின்றார் அருள்திரு. "இரா. சூசைநாதன்" அடிகள் இவர் "அருள்வாக்கு அறிவோம்" பகுதிக்குப் புதியவரல்ல ... ஏற்கனவே "சட்டநூல்களை" (தோரா) தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டி வாசகர்களின் அன்பையும அபிமானத்தையும் பெற்றவர்.

மீண்டும் ஒரு தடவை அவரின் சேவையைப்பெற உங்கள் சார்பாக 'திருமறைப்பணி நிலையம்" அவரை அன்புடன் அழைக்கிறது.

படியுங்கள்... பயனடையுங்கள்.

அன்புடன் எஸ். ஏ, நாதர்

# பைபிள் கதை

வணக்கம் பிள்ளைகளே!

லோத் காப்பாற்றப்பட்ட கதை சொன்னேன் இல்லையா! நாடு முழுவதும் நெருப்பு எழும்பி மக்களையும் பயிர்பச்சைகள் அனைத்தையும் அழித்துவிட்டன என்றும் சொன்னேன்.

மறுநாட்காலை ஆபிரகாம் எழுந்து அழிந்த நகரங்களை ஏறெடுத்துப் பார்த்தார்! இரண்டு நகரங்களும் பெரிய கண்ணருவியாய்க் காட்சியளித்தது. நீண்ட ஒரு பெருமூச்சை ஆபிரகாம் விட்டுவிட்டுத் தன்நாட்டில் இருந்துபுறப்பட்டு "ஜெரரா" நாட்டில் சுற்றித்திரிந்து கொண்டிருந்தார்.

அந்தநாட்டு மன்னன் "ஒரு மாதிரிப்" பட்டஆள்! ஆபிரகாமின் மனைவி சாராள் வயது போனவளாக இருந்தாலும் நல்ல அழகாக காட்சியளித்தாள். அழகான பெண்களைக்கண்டால் அபிமெலேக்கு என்ற அந்தநாட்டு மன்னனுக்கு சபலம் தோன்றும்.

ஆபிரகாம் யோசிக்கிறார் 'தன் மனைவி' என்று சாராளை ஒத்துக்கொண்டால் - ஒருவேளை தன்னைக்கொன்றுவிட்டு தன்மனைவியை அபகரித்துவிடுவானே என்று பயந்து சாராளை தன்சகோதரி என்று சொல்லச்சொன்னார். ஆபிரகாமும் சாராளும் 'அண்ணன் தங்கை' வேடத்திலே சுற்றித்திரிகிறார்கள்.

சாராளின் அழகைக்கண்ட உடனே 'ஜெரரா' மன்னன் ஆட்களை விட்டு அவளைப்பிடிப்பித்தான்! நீதிமானும் தனக்கேற்றவருமாகிய ஆபிரகாமின் மனைவியை - இன்னொருத்தன் தொட்டால் ஆண்டவன் பார்த்துக்கொண்டிருப்பாரா?

ஆபிரகாம் பயத்தினாலே இப்படி நடந்துகொண்டபோதிலும் "இவன் மூலம் சந்ததியைப் பெருகச்செய்வேன்" என்று வாக்குறுதி அளித்தவர் இவளை மாற்றான் ஒருத்தன் வஞ்சிக்கசும்மா இருப்பாரோ?

பிள்ளைகள் நினைப்பதுபோல இடைநடுவிலே ஆண்டவன் கைவிட்டு விட்டாரே என்று அங்கலாய்க்கத்தேவையில்லை! இறைவன் அபிமெலேக் மனத்திலே ஒருபெரிய கண்ணிவெடியை வைத்தார்.

அது என்ன வெடி. சொல்லத்தானே போகிறேன்.

எஸ். ஏ. நாதர்.

அறிந்து கொள்ளுங்கள் 39

# வாதைகள்

மோயீசன் இறைவனிடம் தான் பாரவோனிடம் சென்று வாதிடுவதற்குத் தகுதியில்லாதவன் என்று கேட்ட பொழுது இறைவன் மோயீசனுக்குத் துணையாக ஆரோனைக் கொடுத்தார். மோயீசனும் ஆரோனும் பாரவோனிடம் சென்று தம்மக்களை இறைவனுக்குப் பலியிட அனுப்பும் படி கேட்டனர். பாரவோன் இஸ்ராயேல் மக்களை அனுப்ப மறுக்கிறான். இதன்பின் யாவேக்கும் (இறைவனுக்கும்) பாரவோனுக்கும் இடையே நடக்கும் கடும் போட்டியாக நிகழ்ச்சிகளை விபரிக்கிறார் ஆசிரியர் (யாத் 5:1—12:51). இதையே எகிப்தில் நிகழ்ந்த வாதைகள் அல்லது பத்துக் கொள்ளை நோய்கள் என்று கூறுகிறோம்.

இவ்வாதைகள் எகிப்தில் உண்டான இயற்கைப் பேரழிவுகளாகும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எகிப்தில் அடிக்கடி நடந்திருக்கின்றன. இவை இயற்கை அழிவுகளே. இயற்கை அழிவுகளை நவீன கால மனிதன் இறைவனது தீர்ப்பாகத், தண்டனையாக விளக்கம் கூறமாட்டான். ஆனால் பழங்கால மக்கள் அப்படியல்ல அது இறைவனது கோப வெளிப்பாடு. அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்று செயல் பட்டனர்.

நவீன காலமனிதன் இயற்கைச் சட்டங்களை அறிவான். அவற்றின் விளைவுகளையும் அறிவான். இன்று இத்தனை மைல் வேகத்தில் புயல் அடிக்கும் என்று ஏற்கெனவே அறிவிக்கிறான். ஆனால் பழைய காலமனிதன் இயற்கை அழிவுகளை ஆள் தன்மை உடையதாக எண்ணினர். அதாவது பழைய கால மக்கள் இயற்கை ஒவ்வொன்றிற்கும் தெய்வங்கள் இருப்பதாக வணங்கினர். இந்துசமயத்தில் மழைக்கு வர்ணபகவான் என்னும் தெய்வம் உண்டு. அதைப் போன்று இஸ்ராயேல்மக்களைச் சுற்றிவாழ்ந்தவர்களும் பல தெய்வங்களைக் கொண்டவர்கள். தங்களுக்குப் பயன்படும் நிகழ்வுகளைத் தரும் தெய்வங்கள் நட்புடைய தெய்வங்கள் என்று கருதினர். இஸ்ராயேல் மக்கள் இறைவன் அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளவர் என்று எண்ணினர். எனவேதான் இவ்வாதைகளை யாவேயின் ஆற்றலின் அடையாளமாகக் கண்டனர். இயற்கையை தன்திட்டத்திற்கேற்ப பயன்படுத்துகின்றார்.

எகிப்தில் நடந்த வாதைகள் உண்மையில் இறைவனால் நிகழ்கின்றன என்று மோயீசன் இறைவாக்கால் விளக்குகிறார். இவ்வாதைகளைப் புரிந்துகொள்ள விசுவாசம் எமக்குத் தேவை.

இ. ம. ஜெயசீலன்.


# காவலன் கண்மணிகள்

| ஒளி: 2<br>சுடர்: 12 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## தாவீதடிகள் பரிசுத் திட்டம்

### சிலுவைப் புதிர்: 2.

கவனமாக வாசியுங்கள். கிறிஸ்தவன் அறியவேண்டிய அடிப்படையான உண்மைகளும் ஒழுங்குகளும்.



நாம் வீடுபேறடைய வேண்டுமாயின், இராச பாதை நமக்குத் திறக்கப்பட்டுள்ளது. அதில் விசுவாச மந்திரத்தில் அடங்கியுள்ள பேருண்மைகளை அறியும் முயற்சியை ஞான மார்க்கம் என்றும், பத்துக் கற்பனைகள், திருச்சபைக் கட்டளைகள் வழியாக ஒழுக்க நெறிகளைச் செம்மையாக்கும் முயற்சியை அன்பு மார்க்கம் என்றும். அருட்சாதனங்களைப் பயனுள்ள வகையில் பெற்று அருள் வாழ்வை வளம் பெறச் செய்யும் முயற்சியைப் பத்தி மார்க்கம் என்றும் சொல்லலாம்.

நடுமரம்: 6 எழுத்துக்களையுடைய சொல் கொண்டது.
குறுக்குமரம்: 3 எழுத்துக்களையுடைய சொல்கொண்டது.

1. விசுவாச மந்திரத்தில் அடங்கியுள்ளவை நடுமரத்தில் வரும்.
2. அருட்சாதனங்களைப் பயனுள்ள வகையில் பெற்றால் வரும் வாழ்வு குறுக்கு மரத்தில் வரும்.

விடைகளை இப்பொழுது அனுப்ப வேண்டாம்.
அனுப்பச் சொல்லும் வரை காத்திருங்கள்.

### அங்கத்தவர் பட்டியல்

| அங் எண் | பெயர் | ஆண்டு | பாடசாலை |
|---|---|---|---|
| 57 | ச. பிறின்ஸ்லி | 9 | உயிலங்குளம். றோ. க. த. க. மன்னார். |
| 58 | ச. மடோனா | 9 | புனித சவேரியார் ம.ம.வி. மன்னார். |
| 59 | ச. பியூலா | 7 | இலகடிப்பிட்டி றோ. க. த. மன்னார். |
| 60 | பி. நியூட்டன் | 10 | புனித சாள்ஸ் ம. வி. யாழ்ப்பாணம். |
| 61 | செ. யேசுநேசன் | 10 | புனித சாள்ஸ் ம. வி. யாழ்ப்பாணம். |
| 62 | சா. யஸ்ரீன் | 10 | மண்டைதீவு றோ க. த. க. யாழ்ப்பாணம். |
| 63 | ஞா. ரெட்ணராஜ் | 8 | புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம். |
| 64 | எ. மேரி எமில்டா | | புனித அந்தோனியார் றோ. க. பெ. பாஷையூர், யாழ்ப்பாணம். |

### கட்டுரை கதை கவிதை

மையக்கரு: எம் விழிகளின் ஒளியேசு

இதற்குரிய விதிகளைப் பாதுகாவலன் இதழ் 11(27-5-88) இல் பார்க்கவும். விதிகளுக்கமைய உங்கள் ஆக்கங்களை எழுதவும்.

அன்பு விழி.

'ஆ' பத்துக்கள்.........நிரப்புங்கள்

1) அகரத்தின் முதல்வன் ஆ.....................
2) மனிதருள் முதல்வன் ஆ......................
3) தலைக்கனத்தால் வருவது ஆ..................
4) வல்லரசுகள் செய்து குவிப்பது ஆ............
5) அறுபதுநாள் மட்டும் நிற்பது ஆ............
6) புத்திமட்டு என்றால் வருவது ஆ............
7) யேசுவின் பிறப்பைக் குறிக்கும் காலம் ஆ............
8) என்றும் அழியாது நம்மில் இருப்பது ஆ............
9) நாட்டை நாடுபிடித்தால் அது ஆ............
10) செப முடிவில் சொல்வது ஆ..........

விடையை 30-6-88க்குள் அனுப்பவும்.

போட்டி விதிகளுக்குரிய தகவல்களைத் தர மறக்கவேண்டாம்.

அன்பு விழி

# இளைஞன்

இளைஞனைவன் தன் குடும்பத்தையோ, அல்லது சமுதாயத்தையோ, நாட்டையோ, முன்னேற்றத்தின் வழிக்கு இட்டுச் செல்வது சிறந்ததாகக் கருதப்படும். அவ்வாறே அவ்வழிக்குத் திரும்புவதற்கான வழிவகைகளான அன்பு மன்னிக்கும் பண்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, பணிவு போன்ற பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்பதற்கிணங்க அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து சமத்துவமாக வாழ வேண்டிய பண்புகளைக் கடைப்பிடித்து வாழ வழிவகுப்பதும் இளைஞனின் கடமைகளில் ஒன்றாகும்.

இன்று எம்மத்தியில் கேட்கின்ற குரலொலிகள் என்ன? நான் பணக்காரன் நீ ஏழை, நான் அறிவாளி, நீ அறிவில்லாதவன். நான் நல்லவன், நீ கெட்டவன், நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் ஏன் இக்குரலொலியெல்லாம் கேட்கவேண்டும்? எம் மத்தியிலே சமத்துவம் இல்லை. விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இல்லை. அன்பில்லை. இவ்வாறு வாழ்ந்தால் சமத்துவம் பேணப்படுமா ?

அன்பு இளம் உள்ளங்களே! அன்பு, மன்னிப்பு, பணிவு, விட்டுக்கொடுத்தல் ஆகியவற்றை உங்கள் உள்ளங்களில் வளர்த்து உங்கள் நிழலில் மக்களை வாழவிடுங்கள். எல்லா மக்களையும் அடிமை வாழ்விலிருந்து விடுதலையாக்கிச் சமத்துவம் உள்ளவர்களாக வாழவேண்டிய ஆறுதல்களை அளிப்பீர்களாக.

தீ. சந்தியோகு,
முருங்கன்.




இளைஞர் உலகம்
அ. ம. தி குருமடம்
கொழும்புத்துறை,
10-6-88

அன்பு இளம் நெஞ்சங்களுக்கு

"கண்ணுக்கு அழகாப் பெண்ணைப் படைச்சான்.
பொண்ணுக்குத் துணையா
ஆணைப் படைச்சான்.
ஒண்ணுக்குட் பத்தாய்ச் செல்
வத்தைப் படைச்சான்
உலகப் நிறைய இன்பத்
தைப் படைச்சான்
என்னைப்போலே பலரையும்
படைச்சு — அண்ணே
என்னைப்போலே பலரையும்
படைச்சு
இதுக்கும் அதுக்குர் ஏங்க
வைச்சான்
ஏழையைக் கடவுள் ஏன்
படைச்சான்?"

— என்கிறார் கவிஞர் பட்டுக்கோட்டை சல்யாணசுந்தரம். இன்று எத்தனையோ ஏழைகள் ஓலைக்குடிசைகளிலிருந்து எழுப்பும் அழுகுரல்கள் இன்னும் உங்களுக்குக் கேட்கவில்லையா? அல்லது கண்கள் இருந்தும் காணாதவர்கள் போல, காதுகள் இருந்தும் கேளாதவர்கள்போல, உள்ளம் இருந்தும் உணராதவர்கள் போல உணர்ச்சி மரத்துப்போன மரக்கட்டைகளா நீங்கள்? இல்லவே இல்லை. இளைஞர்களே, நீங்கள் இதற்கு முற்றிலும் முரணானவர்கள். ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற உணர்ச்சிவேகம் உங்களிடம் இருக்கின்றது. எல்லோரையும் நல்லவராக, வாழ்வில் வல்லவராக வாழ வைக்கவேண்டும் என்ற ஆர்வம் உங்களிடம் இருக்கின்றது. 'எளியோரைத் தாழ்த்தி வலியோரை வாழ்த்தும்' உலகை மாற்றும் ஆற்றல் உங்களிடம் இருக்கின்றது.

பதுங்கி இருந்தது போதும் பாய்ந்து வாருங்கள்.
பசிக்கக் கிடந்தது போதும் — புசிக்கச் செய்யுங்கள்
ஏழைகளின் கண்ணீரை
நீங்கள்தான் துடைக்கவேண்டும்
எளியோர்க்கு நல்வாழ்வினை
நீங்கள்தான் கொடுக்க வேண்டும்.

அன்பு நெஞ்சன் வி பி.

## இளைஞனே சற்று நில்

உதிக்கின்ற
உறவுகளை — நீ
அன்பாகச் சேர்த்திட
ஆறுதல் பெற்றிட
இளைஞனே சற்று நில்

பணியென்ற
பாதணியை - நிதம்
அகற்றாமல்
அணிவதற்கு
இளைஞனே சற்று நில்

விதியென்ற
விடுகதையை
விறுடனே
விடுப்பதற்கு
இளைஞனே சற்று நில்

ஒளிர்கின்ற
தீபமாகப் - பல
திங்கள் எரிவதற்கு
தியாகம் புரிகின்ற
இளைஞனே சற்று நில்

கவியென்ற
காவியத்தில்—நீ
காலமெல்லாம்
கலப்பதற்கு
இளைஞனே சற்றுநில்

குடியென்ற
குறைபாட்டை
அடியோடு
அழித்தொழிக்க
இளைஞனே சற்றுநில்

புகழ்என்ற
பூச்சரத்தை
கையோடுபெற்றிட
காலத்தைவென்றிட
இளைஞனே சற்றுநில்

கல்வியென்ற
ஓவியததை
ஓயாது வரைந்திட
ஒற்றுமையைவளர்த்திட
இளைஞனே சற்றுநில்

வாழ்கின்ற
வாழ்க்கையை
வளமாக்கச்செய்திட
வசந்தத்தைப்பெருக்கிட
இளைஞனே சற்றுநில்

பொன்போன்ற
பொருட்காலத்தை
பண்போடுகழித்திடவே
பாரில்புகழ்பெற்றிடவே
இளைஞனே சற்றுநில்

D. E. ரட்ணராஜ்
இளவாலை

## குருமுத்தண்ணையின் கிசு கிசு-22

அடைக்கலம் : எங்கட பாடசாலையளில இடம் எடுக்கிறதெண்டா அரசாங்கத்தில வேலை எடுக்கிற மாதிரிச் சிரமம் தானண்ணை,

குருசுமுத்தண்ணை : ஏன்தம்பி அங்கையும் இப்படியே?

அடைக்கலம் : போனதையிலை அலைஞ்ச அலைச்சல், பிறகு நல்ல ஏச்சுக் குடுத்திட்டு இப்ப வீட்டுக்குக்கிட்ட இருக்கிற அ. த. க. பாடசாலையில சேர்த்திட்டன் அண்ணை.

குருசு : ஏன் தம்பி இப்ப எல்லாம் ஒரே சோதனை தானே. மாஸ்ரர்மார் கவனம் எடுத்தா பெரிய கட்டிடம் எண்டா என்ன...... சிறிய கட்டிடம எண்டா என்ன, படிப்பு சின்ன பள்ளிக்கூடங்களிலதானே படிப்பிக்கவும் சுகமாய் இருக்கும்,

அடைக்கலம் : ஊரோட மாற விரும்புவினம். வந்திட்டா வீட்டோட இருக்கவல்லோ சில ஆசிரியர் விரும்புகினம். ஹர்த்தால் லீவுகள் எண்டா பிள்ளைகளை விட இவையளுக்கெல்லோ பெரிய சந்தோஷமாய் இருக்கு.

குருசு : கல்வியைக் கற்பிக்கிறதில கஞ்சத்தனம் செய்கிற இந்த ஒருசிலரால நல்ல பணிசெய்கிற பலருக்கு இழுக்கு வாறதிலும் பார்க்க இந்த ஒருசிலரைத் தண்ணியில்லாக் காட்டுக்கு எல்லோ அனுப்பிவைக்கவேணும் பாரு.

### மணிக்கதைப் போட்டி

விபரங்களை 3—6—88 பாதுகாவலனில் பார்க்கவும்




## மணமான வாழ்விற்கு மணியான யோசனைகள்

''திருமணம் தான் உலகின் தாய் அதனாலேயே மக்கள் வாழ்கிறார்கள். மக்கள் பெருகவும் உலகம் சுழலவும் சொர்க்கம் நிறையவும் முடிகிறது" என்கிறார் டெய்லர் என்ற அறிஞர். இது வெறும் சாதாரண ஒரு சடங்கு அல்ல. ஆணும் பெண்ணும் அகத்திலும் புறத்திலும் ஒன்றுபட்டு இரண்டறக் கலந்துவிட்டனர் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாகும். புனிதமான சடங்கு தான் இது. ஏனெனில் அதன் மூலம் இருவர் என்ற நிலை மாறி ஒருவர் என்னும் நிலை ஏற்படுகின்றது. பிரிந்து கிடந்த இரு உள்ளங்களுக்கு இடையே அன்பையும் அனுதாபத்தையும் வளர்த்து நல்வாழ்வு வாழச் செய்யும் ஒப்பந்தமாகும். இந்த இணைப்பு நடக்க வேண்டிய ஓர் இயற்கை நியதி. ''திருமணம் இறை நெறியையும் கண்ணையும் காக்கும் கோட்டை அணைக்கும் அரண், வாழ்வின் பகுதியைக் காத்துக் கொள்ளும் கற்பாறை'' மனிதன் தனக்கொரு துணையைத் தேர்ந்தெடுத்து அவளுடன் அன்புடனும் கருணையுடனும் வாழும் வாழ்வே ஆண்டவனுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது. இது திருமணத்தினால்தான் நிறைவு பெறும். வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளில் கல்யாணமே சிறந்தது. திருமணத்தினால் தான் ஆணும் பெண்ணும் நட்பும், நம்பிக்கையும், கொண்டு நீடித்து வாழ முடிகிறது.

மனித உறவுகளிலே இது மிகவும் நெருக்கமானது. இரு ஜீவன்களின் கூட்டு வாழ்வைத் துவக்கி வைப்பது. இது வாழ்வில் முழு இடத்தையும் பெற்றுள்ளது. புறவாழ்வில் அறம் தழைக்க அகவாழ்வில் அன்பு தழைக்க திருமண வாழ்வு வாய்ப்பினைத் தருகிறது. ஆண் பெண் இரு மானிட நெஞ்சங்களிலே எழும் துடிதுடிப்[illegible]இந்த உறவுக்கு உந்திவிடுகிறது. ஆசைத்துடிப்புகள் இந்தக் கலப்பிலே அமைதி பெற்று ஐக்கியமாகின்றன. இந்த வாழ்விலே தான் அன்பும் அருளும் பண்பும் கலையும் வளருகின்றன. ஒரு தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவைவிட, ஒரு தந்தைக்கும் மகளுக்கும் உள்ள உறவைவிட, கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவுதான் மிகச்சிறந்ததாகும். எப்படியென்றால் ஒரு தாய் தன் மகனை விட்டுப் பிரியக்கூடாது என்ற விதியில்லை. ஒரு தங்கை தன் அண்ணனைவிட்டு பிரியக்கூடாது என்ற விதியில்லை. ஆனால், ஒரு மனைவி தன் கணவனை விட்டுப் பிரியக் கூடாது என்று சட்டமே இருக்கிறது. (Restitution of Conjugal Rights) மனித வாழ்வில் மேலான நிலை. இக்கூட்டு வாழ்க்கையின் தொடக்கத்தைத்தான் திருமணம் என்றும் வாழ்க்கை ஒப்பந்தம் என்றும் கூறுகின்றோம். (தொடரும்)

## என் நண்பரைத் தேடுகிறேன்

(சென்ற இதழ் தொடர்)

ஆயினும்...இந்த பரிதாப சாம்ராஜ்யத்தில் நான் நித்திய ஆனந்தம் அனுபவிக்கிறேன். ஏன் தெரியுமா ? எனக்கு ஒரு நண்பன் உண்டு. பல நாட்களுக்கு முன் நான் இட்டது ஒரு கவளம் சோறுதான் என்றாலும், என் காலைச் சுற்றிவரும் இந்த ஐந்தறிவு ஜீவன் தான் என் நண்பன். அவன் நாய் இனத்தைச் சேர்ந்தவன் தான் என்றாலும், அவனிடம் மனித மாண்புகள் ஏராளம்! அவனுக்குப் பேசத் தெரியாது...ஆனால் என் உணர்வுகளை மதிக்கத் தெரியும். சோற்றுக்காக என் காலில் வருடியதில்லை. ஏனென்றால், நாங்கள் பகிர்ந்து கொள்வது உணவை மட்டுமல்ல...பசியையும் தான். என் கண்ணிமைகூட என்னை ஏமாற்றியதுண்டு. ஆனால் அவன் அப்படியல்ல. இந்த புத்திசாலி மக்களோ 'பிச்சைக்காரன் வளர்க்கும் நாய் தானே' என்று கல்லால் அவனை எறிவதுமுண்டு! அந்தக் கல்பட்ட காயத்திலிருந்து வழிந்தோடும் சிவப்புச் சாயத்தை என் கைகளால் துடைத்து நான் கண்ணீரால் மருந்து போடுவதுமுண்டு.

இதோ...நட்புக்கு இலக்கணம் வகுத்த அவன் முன்னே செல்ல நான் பின் தொடர்கிறேன்..."நாய் வரும் முன்னே, பிச்சைக்காரன் வருவான் பின்னே" இந்தப் புதுமொழி என் செவிகளில் விழ வாழ்க்கைப்பயணம் தொடர்கிறது.



# வாசகர் கருத்து



## நற்பணி தொடரட்டும்

27. 5. 88ல் வெளியான பாதுகாவலன் பத்திரிகையில் ''குடும்பம் ஒரு கதம்பம்'' என்ற பகுதியில் அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் எழுதிய கணவன் மனைவி சம்பந்தமான கருத்துக்கள் மிகவும் நன்மையான வை, காரணம் தற்போதைய காலகட்டத்தில் பிரச்சனைகள் உருவாகுவது சாதாரணமாகி விட்டது, சந்தர்ப்ப சூழ்நிலைகளும், புரிந்துணர்வு அற்ற நிலைகளும் சலனங்கள் வளரக் காரணமாகிவிட்டன, எனவே இந்தப் பகுதி மிகவும் முக்கியமான பகுதியாக நான் கருதுகிறேன். பெரும்பாலும் பிரசங்கங்கள், அறிவுரைகள் மக்களை வழிப்படுத்தவே கூறப் படுகிறது. எனவே அந்த நற்பணியில் பாதுகாவலன் தொடர்ந்து செல்லட்டும். சில வருடங்களுக்கு முன்னர் பாதுகாவலன் வெறும் நற்செய்திப் பத்திரிகையாகவே இருந்தது, இன்று பல நல்ல கருத்தடங்கிய செய்திகள், கதை, கவிதை போட்டிகள் மூலம் மாணவர்களுக்கும், பெரியோர் எல்லோருக்கும் உகந்த ஒரு செய்திப்பத்திரிகையாக உயர்ந்துள்ளது. எனது மனதில் கூட எப்போ அடுத்த பத்திரிகை என்று ஒரு ஆவலை ஏற்படுத்துகிறது. போட்டி கேள்வி பதில், பரிசுத்திட்டம் இவை அறிவை வளர்க்கும் சிறந்த முறையாக நான் கருதுகின்றேன்.

''எம்கருத்து'' பகுதியும் ஆணித்தரமான உண்மை நிலையை மக்களுக்கு வெளிப் படுத்துகின்றது. எமது திருமறைப்பணி சமயத்திற்கு என்று மட்டுமல்ல! நாட்டு மக்களுக்கும் என்பது போல் உணர்வை ஏற்படுத்தக் கூடிய பல தீர்க்கமான, பல கசப்பான உண்மையை கூறுவதை இட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

பாதுகாவலன் எல்லோரையும் பாதுகாக்கும் ஒரு பாதுகாவலனாக வளரட்டும், பாராட்டுக்கள் பல.

அருள் தெய்வேந்திரன்
2 ம் வட்டாரம்
அல்லைப்பிட்டி.

## எழுதிச் செபியுங்கள் போட்டி—16

''தமிழர் தாயகத்தைச் சிங்களவர்கள் மதிக்க'' ஒரு செபம் எழுதி 25-6-88க்குமுன் பாதுகாவலன், தபாற்பெட்டி இல 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். சிறந்த செபத்துக்குப் பரிசு ரூபா 25. பரிசு பெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும 8-7-88 அன்று பாதுகாவலனில் வெவரும்.

## எழுதிச் செபியுங்கள் போட்டி-15

### பரிசுபெறும் செபம்

தமிழர் ஒற்றுமையாய் தேர்தல் பற்றிய தீர்மானங்களை எடுப்பதற்கான செபம்

இயேசுவே, எங்கள் நாடு, நீதியின்றி, ஒற்றுமை இன்றி அல்லற்படும் இவ்வேளையிலே, நீரே எங்களுக்குத் துணையாக இருந்தருளும். தமிழ் மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தருளும், சமாதானத்தை விட்டுச் செல்கிறேன் என் சமாதானத்தை உங்களுக்கு அளிக்கிறேன் என்று அப்போஸ்தலர்களுக்கு மொழிந்தீரே. எங்கள் பாவங்களைப் பாராமல் எங்களைக் கண்நோக்கிப் பாரும். எங்கள் நாட்டிலே உள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஒரு சுமுகமான முடிவை எடுத்து, தேர்தல் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளத துணைபுரியும. விரைவிலே தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ, தமிழ மககள் ஒற்றுமையுடன் செயற்பட்டு நல்லமுறையில் முடிவுகளைத தீர்மானிக்க அருள்புரியவேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம். ஆமென்.

பரிசு பெறுபவர்:- செபமாலை மேரி அரைனிற்ரு,
தி. கு. க. மடம், வங்காலை.

பாராட்டுப் பெறுவோர்:-

மாதகல் செபயேயஸ வீது, மா. ஜெறி.
பலாலி வடக்கு: லில்லி கார்மலா, லில்லி பற்றிமா, இவிலரினா சியாமளா.
இளவாலை: செபயேம்ஸ்; கொன்சிஸ்ரா அருளானந்தம், ம. பற்றிக்குலசீலன், மேரி டெலசியா சேவியர், பெனடிக்ற் எமில் மோசவ், அ. யூட் அல்வின், யோசவ கமலநாதன்,
இளவாலை செபயூட்லேன், க. மேரியண்சன்.
சில்லாலை: தா. அநதோனிபபிள்ளை (ஜொய்சி)
அல்லைபபிட்டி: 2ஆம வட்டாரம், பா. உதயநாதன், சிங்கராசா உஷா, பா. மறஜினு காநதினி.
உருமபராய் கிழக்கு: சோதிநாதன சோகிலவதனி.
புஙகுடுதீவு. மேரி மாலதி ஞானரெதினம்
உடுவில்: பெத்தெல, தேவசிந் செபஸரியாம்பிள்ளை.
நாரூட்டான.: பாலைக்குளி, சுதா.

வாழ்வுதரும் இறைவாக்கு

அவர்களின் நடத்தையைக்
கண்டேன், ஆயினும்
குணப்படுத்துவேன்
திரும்பக் கூட்டிவந்து
அழுகிறவர்களுக்கு
ஆறுதல் அளிப்பேன்
அவர்கள் உதடுகளிலிருந்து
புகழ் மொழிகள்
உதிரச் செய்வோம்

இசை. 57 : 18

இறைவாக்கு வாழ்வுதரும்

## காவலூர் ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் வாடினர். நோயுற்ற இவர் கொழும்புத்துறைப் புனிதவளன வயோதிபர் இல்லத்தில் சிலகாலம் இருந்து தமது 73 வது வயதில் 1987 ஆனிமாதம் 16 ஆம் தேதி இறைவனடி சேர்ந்தார். காவலூர் ஒரு கவிஞனை இழந்தது. உதயதிசை ஒரு வடிவெள்ளியை இழந்தது. தமிழ்கூறும் நல்லுலகம் முதுபெரும் பாவலனை இழந்தது. அவரது ஆன்மா சாந்திஅடைய இறைவனை பிரார்த்திப்போமாக. அவரது படைப்புக்களை அழியவிடாது பாதுகாத்து எதிர்காலச சந்ததியினரும் இந்த அருங்கலைஞனை அறிந்து போற்ற வழிசமைப்பது எம் கடனே. இதுவே நாம் அவருக்குச்செய்யும் நன்றிக்கடனாகும்.

— எஸ். எம். ஜே.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி சகாயமேரி யோசேப்
(சோதி)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 8-11-1962 | 11-5-1988 |

இரக்கம் நிறைந்த இறைவா, நீர் எங்கள் பாவங்களின் நிமித்தம் சிந்திய இரத்தத்தின் பேறுபலன்களை கண்ணோக்கி, திடீரென நீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட சகாயமேரி (சோதி) என்னும் அடியாளின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்து உமது வானரசில் தயை கூர்ந்து ஏற்றருள வேண்டுமென்று வேண்டுகின்றோம் ஆமென்.

இவரின் திடீர் மறைவால்
துயருறும்
தந்தை, தாய், சகோதரி,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்.

சென். பீற்றர்ஸ் வீதி,
உயிலங்குளம். A/60

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| | |
|---|---|
| யே | ஒளி |
| | வழி |
| | உண்மை |
| சு | உயிர் |
| | உயிர்ப்பு |

விசுவசிப்பவன் வாழ்வான்.
அரு. 11:25

மனைவிளக்கு



அமரர் ஞானம்மா
சிமாம்பிள்ளை

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1904-10-16 | 1988-05-14 |

''வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்
படும்.'' குறள் 50.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 13-06-1988 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாழ். சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் பூசையில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.

நன்றி
அன்புடன் நினைவுகூரும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.
பிரான்சீஸ். சென். ரூச்
(விரிவுரையாளர்)

இல. 60, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். A/59

## 25-ம் வருட நினைவு தினம்



அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30-7-1900 | 25-6-1963 |

## 21-ம் வருட நினைவு தினம்



டெய்சி பிரான்சிஸ்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26-3-1910 | 6-3-1967 |

## 1-ம் வருட நினைவு தினம்



S. P. பிரான்சிஸ்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 6-10-1937 | 2-1-1987 |

## 4-ம் வருட நினைவு தினம்



யுஸ்ரெலா ஜஸ்மின்
கிறிஸ்ரியன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26-9-56 | 22-1-84 |

அன்பின் இறைவா, மண்ணக வாழ்வை நீத்து விண்ணகமெய்திய உமதடியான் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் அவர்கள் தம் விண்ணக வாழ்வின் வெள்ளி விழாவைக் கொண்டாடத் தன் அருமை மனைவி, அன்பு மகன், ஆருயிர்ப் பேத்தி ஆகியோரை அழைத்துக் கொண்டார். இவர்களின் ஆன்மாக்களுக்கு நித்திய பேரின்ப வாழ்வை அளித்தருளும்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் 25-6-88 காலை 6-15 மணிக்கும், கொழும்பு புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் 25-6-88 மாலை 5-15 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

பாதுகாவலன்
PATHUKAVALAN

# குருவின் கொலையை கண்டித்து ஆயருக்கு அனுதாபச் செய்தி

அருள்திரு சந்திரா பெர்னாண்டோவின் கொலையைக் கண்டித்து யாழ். மறைவட்ட ஆயருக்கு குருக்களும் திருமலை - மட்டுநகர் ஆயருக்கு அனுப்பிய அனுதாபச்செய்தியில் நீதிக்கும் சமாதானத்துக்குமான அவரது பங்களிப்பை நினைவுகூர்ந்து, "துன்பப்படுகின்ற ஒடுக்கப்படுகின்ற, ஏழைகளுக்கான திருச்சபையின், அன்பையும், ஆதரவையும் தனது ஆளுமையில் அவர் வெளிப்படுத்தினார். குருவினமேல் தொடுக்கப்பட்ட கண்மூடித்தனமான வன்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

## மறை ஆசிரியருக்கான மதிப்பீட்டுக் கருத்தரங்கு

புதிய பாடத்திட்டத்தின் தொடர் மதிப்பீட்டு முறையில் கத்தோலிக்க மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருதி யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டுக் கருத்தரங்கு வைகாசி மாதம் 29ம், 30ம் திகதிகளில் யாழ் மறைக்கல்வி நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு மறைக்கல்வி நடுநிலையத்தில் நடத்தப்பட்டது. இதில் 270 கத்தோலிக்க, மறையாசிரியர்கள் கலந்து கொண்டனர். நடுநிலைய இயக்குனரான அருள்திரு நேசநாயகம் அடிகளாரின் வரவேற்புரையைத் தொடர்ந்து கத்தோலிக்க ஆசிரிய சங்கத் தலைவர் திரு அகஸ்ரின் அவர்கள் உரையாற்றினர். அவர் தமது உரையில் அரசாங்கத்துடன் இணைந்து எமது பாடத்திட்டத்தைத் தயாரிக்கும் முறைபற்றி விளக்கினர்.

பிரதம கல்வியதிகாரியான உயர்திரு. கந்தசாமி அவர்களால் மதிப்பீடு பற்றிய உரை நிகழ்த்தப்பட்டது. அதில் மாணவரை மதிப்பீடு செய்யும் முறை, புள்ளியிடும் முறை, மாணவருக்கும் ஆசிரியருக்குமுள்ள நெருங்கிய உறவு என்பன பற்றி எடுத்துக் கூறப்பட்டது. மதிப்பீட்டு முறையில் ஆசிரியர் தாம் சந்திக்கும் பல பிரச்சினைகளைக் குறித்துக் கேள்விகள் எழுப்பினர். அவற்றிற்குக் கல்வியதிகாரியவர்களால் தகுந்த பதிலும் அளிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் சிறு குழுக்களாகப் பிரிந்து விரிவான ஆய்வு நடாத்தப்பட்டது. அதில் 10ம், 11ம் ஆண்டு மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பரிமாறினர். ஆய்வின் முடிவு பொதுவாக எடுத்துரைக்கப்பட்டது. இதன்மூலம் மதிப்பீட்டு முறை பற்றி ஆசிரியர்கள் தெளிவைப் பெற்றுக் கொண்டனர்.

தகவல்
சிஸ். கில்டா.

## எஸ்.வீ.பீ. யாழ். மத்திய சபை கூடியது

"புனித வின்செண்டிபோல் சபையினரின் அன்பின் சேவை சிலுவைப்பலியின் தொடர்ச்சி. கிறிஸ்து விட்டுச் சென்ற மீட்புப் பணியின் தொடர்ச்சியையே இச்சபையைச் சார்ந்த சகோதரர் செய்து வருகின்றனர்." இவ்வாறு அருள்திரு. R. M. G. நேசநாயகம் புனித வின்செண்டி போல் பேரவையின் யாழ்ப்பாண மத்திய சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சொற்பெருக்காற்றும் போது எடுத்துரைத்தார்.

புனித வின்சென்டி போல் பேரவையின் யாழ் மத்திய சபை வருடாந்தப் பொதுக் கூட்டம் 28. 5. 88 அன்று காலை 10 மணிக்கு தலைவர் சகோ. C. R. யோசவ் தலைமையில் ஆரம்பமாகியது.

மேற்படி கூட்டத்திற்கு யாழ். மறைமாவட்டத்தில் செயற்படுவரும் பந்திகளின் சகோதர சகோதரிகள் 35 பேர் சமூகமாயிருந்தனர்.

தலைவரின் வரவேற்புரையில் "இக்கட்டான நிலைமிகுந்த இந்த நாட்களில் வெகு சிரமத்தின் மத்தியிலும் அநேகர் இன்று சமுகம் தந்தமை பாராட்டப்படவேண்டிய தொன்றாகும்" என்றார். அத்துடன் "இவ்வளவு நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்த எமது ஆன்ம ஆலோசகர் அருள்திரு. ஜெபநேசன் அடிகள் இவ்வேளையில் நம்மத்தியில் பிரசன்னமாக இருந்து திருப்பலி நிறைவேற்ற அருள் பாலித்த இறைவனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்,, என்று கூறினர்.

சபையின் செயலாளர் சகோ. சி. செலஸ்ரின் சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் மத்தியசபையின்வரும் செயற்பாடுகளைக்கடந்த வருடத்தில் செய்தமை குறிப்பிடத்தக்கன :- சகல பந்திகளின் செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் நோக்குடன் ஓர் யாப்பைத் தயாரித்து; அச்சேற்றி வெளியிட்டமை; தேசிய சபையிடமிருந்து இணைப்பு நிதி பெற்று வழங்கியதுடன்; அளவெட்டி, சில்லாலை, பாண்டியந்தாழ்வு, யாழ்நகர் ஆகிய பங்குத் தளங்களில் செயற்பட்டு வந்த பந்திகளை நியுசிலாந்திலுள்ள தலைமையகம் அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தமை; செயற்கை முறையிலான உடலுறுப்புக்கள் பொருத்துவதற்கென யாழ் நகரில் இயங்கிவரும் "ஜெய்ப்பூர்" நிலையத்திற்கும் அகதி நிலைக்குத் தள்ளப்பட்ட குடும்பத்திற்கும்; கத்தோலிக்க வாரஏடான 'சத்திய வேத பாதுகாவலன்' அபிவிருத்தி முதலியவற்றிற்கு நிதியுதவி வழங்கியமை: சபையால் நடாத்தப்பட்டுவரும் விற்பனை நிலையம் சித்திகரமாகச் செயற்பட்டமை; ஆன்ம ஆலோசகரின் குருத்துவப் பணியின் 25 வருட நிறைவு விழாவையொட்டி, சேவை நலப் பாராட்டு விழா எடுத்தமை சிறப்பமசங்களாகும்.

## பாஷையூரில் வணக்கமாதம்

வைகாசித்திங்கள் முதற்தேதி பாஷையூர் பங்கில் ஆரம்பமாகிய மரிஅன்னையின் வணக்க மாதம், 29-5-88 ஞாயிறு அன்று காலை மரிஅன்னைக்கு நன்றித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அன்று பிற்பகல் 4மணிக்கு மரிஅன்னையின் திருச்சுருப்பவனி மூலம் சிறப்பிக்கப்பட்டது. மரிஅன்னைக்கு பாமாலை பூமாலை, செபமாலை என்பன மக்களால் மனமார்ந்தளிக்கப்பட்டதுடன் அத்தாயாருக்கு மிகவும் விருப்பமானதும் உவந்ததுமான ஞானப் பூச்செண்டுகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

பங்குமக்கள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் மரியன்னையின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்தனர்.

திருமதி. யூலியானு பிறின்ஸ்

## 22 வீடுகள் அன்பளிப்பு

83 ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட 22 தமிழ்க் குடும்பங்களுக்கு யாழ் மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் இரிமலை சேந்தாங்குளம் அருகே ...... கட்டப்பட்ட 22 வீடுகளையும் வழங்கும் வைபவம் சமீபத்தில் நடைபெற்றது.

இந்த வீடுகள் அமைந்துள்ள பகுதி 'வாழ்வகம்' என்ற பெயருடன் புதிய கிரா...

விண்ணக வாழ்வின்
31 ஆம் நாள்
நினைவஞ்சலி



திரு. ச. அம்புறோஸ்

31 ஆம் நாள்
நினைவஞ்சலி

தொம்மைப்பிள்ளை
அந்தோனிமுத்து
(தங்கத்துரை)

உதிர்வு:- 9-5-1988

''வாழ்வு மாறுபடுவதேயன்றி அது அழிக்கப்படுவதில்லை''

மன்னிப்பு அளிப்பவரும் அரவணைப்பவருமாகிய தந்தையே! உமது அடியானாகிய தொம்மைப்பிள்ளை அந்தோனிமுத்து மீது இரங்கி ...

## இந்திய ஆயரின் யாத்திரை

முப்பத்தைந்து ஆயர்கள் ஏப்ரல் 20ம் திகதியன்று 21ம் திகதியன்றும் முத்திப்பேறுபெற்ற சவாரா குரியக்கோஸ், அல்பொன்ஸா ஆகியவர்களின் கல்லறைகளில் செபிக்கும்படியாக மன்னானம், பாரனங்...

# 22 வீடுகள் அன்பளிப்பு

83 ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட 22 தமிழ்க் குடும்பங்களுக்கு யாழ் மறை வட்ட மலைத முனைனேற்ற நடு நிலையம் ரீமில சேந்தாங் குளம் அருகே மட்டிவளை என அழைக்கப்படும் பகுதியில் வீடுகளை கட்டிக்கொடுத்து குடியமர்த்தி உள்ளது.

ஒவ்வொன்றும் 30 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 22 வீடுகளையும் வழங்கும் வைபவம் சமீபத்தில் நடைபெற்றது.

இந்த வீடுகள் அமைந்துள்ள பகுதி 'வாழ்வகம்' என்ற பெயருடன் புதிய கிராமமாக உருவெடுத்துள்ளது.

'வாழ்வகம்' கிராமத்தில் குடியிருத்தி இருக்கும் 22 குடும்பங்களது வருவாய்க்கும் சிறு கைத்தொழில்களைநடு நிலையம் அறிமுகம் செய்துள்ளது

## "எம் கருத்துக்" குறள் தெளிவுரை

பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.

## பாதுகாலன் வளர நிதி

| | | |
|---|---|---|
| 153. | ஓர் அன்பர் ஊறணி | 25.00 |
| 154. | திருமதி மெலனி செல்வராசா, கரவெட்டி | 100.00 |
| 155. | ஓர் அன்பர் யாழ்ப்பாணம் | 100.0 |
| 156. | பாதுகாவலன் வாசகர், அடம்பன் | 200.00 |

இலங்கை மக்களின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க செய்திப் பத்திரிகையான பாதுகாவலன் வளரத் துணைபுரியும் உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

ஆ-ர்

இப்பத்திரிகை திரு நீக்கலஸ யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு யூன் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



திரு. ச. அம்புரோஸ்
அன்னை மடியில்:
24-01-1924
இறைவன் அடியில்
14-05-1988

அன்பின் உருவாய், அனைவர்க்கும் இனியராய் பண்பின் சின்னமாய் விளங்கி, உலகுக்கு மறைந்தாலும் எங்கள் உள்ளத்தை விட்டு மறைக்கவும் மறக்கவுமியலாத சவரிமுத்து அம்புரோசின் பாவங்களை மன்னித்து நித்திய ஒளியில் சேர்த்தருளும் நாங்கள் செய்கிற பக்தியான மன்றாட்டினால் இவரின் ஆன்மா சாந்தியடையச் செய்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 13-6-1988 காலை 6 மணிக்கு யாழ். அடைக்கல மாதா தேவாலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் பிரிவை மறவாத
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உதவி:- 9-5-1988

''வாழ்வு மாறுபடுவதேயன்றி அது அழிக்கப்படுவதில்லை''

மன்னிப்பு அளிப்பவரும் அரவணைப்பவருமாகிய தந்தையே! உமது அடியானாகிய தொம்மைப்பிள்ளை அந்தோனி முத்து மீது இரங்கி அவரது பாவப்பிழைகளை மன்னித்து உமது முடிவில்லாத மோட்ச தரிசனையை அளித்தருள்வீராக.

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் சுவாமி. முடிவில்லாத ஒளி அவர்மேல் பிரகாசிக்கக் கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக, ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 9-6-1988 வியாழக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

யாழ் வீதி,
வல்வெட்டித்துறை.

## யாத்திரை

முப்பத்தைந்து ஆயர்கள் ஏப்ரல் 20ம் திகதியன்று 21ம் திகதியன்றும் முத்திப்பேறுபெற்ற சவாரா குரியக்கோஸ், அல்பொன்ஸா ஆகியவர்களின் கல்லறைகளில் செபிக்கும்படியாக மன்னனம், பாரனங்கானம் ஆகிய இடங்களுக்கு யாத்திரையாகச் சென்றனர்.

பாரனங்கானத்தில் பேராயர் தெல்ஸ்போர் தொப்போ தலைமையில் கல்லறைக் கோயில் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது, அல்பொன்ஸாவை கேரளத் திருச்சபையின் அதிசிறந்த கனி என வர்ணித்த பேராயர் தொப்போ இன்று தேவைப்படுவது திருச்சபையில் ஒருமைப்பாடே என்றார்.

மன்னனத்திற்கு அவர்கள் சென்றபோது பெருந்தொகையான மக்கள் கூடி 40 மணித் தியால நற்கருணை ஆராதனையில் ஈடுபட்டிருந்தனர். மு-பெ, சாவாரா நற்கருணைப் பக்தியை ஊக்குவித்தவர்.

கார்மேல் துறவற சபைத் தலைவர் பிதா விஜயானந்த் நெடுபுரம் ஆயர்களை வரவேற்றார். பின்பு அவர்கள் ஆச்சிரமத்தைத் தரிசித்தனர்.

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**